சித்திர ராமாயணம்

வாலிகாவியம்

341. தம்பிக்காக வாலி சரணாகதி!

'நாங்கள் உனக்கு உன் தம்பி லட்சுமணன் போலத் தொண்டாற்றப் போகிறோம்' என்று ராமபாணங்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தன வாம், ராமன் இளைஞனாக இருந்தபோது, அவனுடைய கன்னிப் போருக்குப் பின். புதிதாய்க் கிடைத்த அஸ்திரங்களைச் சிறுவன் தன் ஆபரணங்கள் அப்படியும் இப்படியும் அசையப் பார்த்துப் பார்த்து அதிசயிக்க, அந்த அஸ்திரங்களும் அதிசயமாக உரையாடுவது போலத் தோன்றியது.

அனுமன், சுக்கிரீவன், ராமன்

பாணங்கள் லட்சுமணனைப்போல் பணி செய்தன என்றால், ராமனுடைய வில்லாகிய கோதண்டம் அனுமனைப் போலத் தொண்டாற்றியதாம்.

அனுமனைப் போன்ற துணைவன் வாலிக்குக் கிடைக்கவில்லை. சுக்கிரீவனுக்குப் பாக்கியமாகக் கிடைத்திருந்தான். இனி, அனுமன் சுக்கிரீவன் ஆகிய இருவரும் ராமனுக்குத் துணைவராகி உதவுவார்கள் அல்லவா?

'என் தம்பி இனி உன் தம்பியாக உதவுவான். அவனும் அனுமனும் போன்ற துணைவர் வேறு யாரும் இல்லை. இவர்கள் உதவியால்—முக்கியமாக் அனுமன் உனக்குக் கைவில்லைப் போல் உதவப் போகும் உதவியைக் கொண்டு—சீதாதேவியைத் தேடி அடைந்து சிறப்புடன் வாழ்வாயாக' என்று கூறினான் வாலி, ராமனை நோக்கி.



அடுத்த கை அணைக்கிறது!

பின்பு தம்பியை அருகில் அழைத்து அணைத்துக் கொள்கிறான். இந்த அன்புக் காட்சியை முதலில் பார்த்துவிட்டு, இந்தச் சகோதரர்களின் பேச்சையும் கவனிப்போம்:

என்(று) அவற்(கு) இயம்பிப் பின்னர்,
இருந்தனன் இளவல் தன்னை
வன்றுணைத் தடக்கை நீட்டி
வாங்கினன் தழுவி, 'மைந்த!
ஒன்(று) உனக்(கு) உரைப்ப துண்டால்
உறுதி; அஃ(து) உணர்ந்துகோடி,
குன்றினும் உயர்ந்த தோளாய்!
வருந்தலை' என்று, கூறும்.

[அவற்கு இயம்பி - அந்த ராமனை நோக்கிச் சொல்லி விட்டு. இருந்தனன் இளவல் தன்னை - அருகில் இருந்தவனாகிய தம்பி சுக்கிரீவனை. வல்துணைத் தடக்கை - வலிய பெரிய இரண்டு கைகளை. நீட்டி வாங்கினன் தழுவி - நீட்டிச் சேர்த்துத் தழுவிக் கொண்டு. மைந்த - பிள்ளாய்; குழந்தாய். உண்டால் - உண்டு; ஆல் - அசை. அஃது உணர்ந்து கோடி - அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வாய். வருந்தலை - வருந்தாதே. கூறும் - இன்னும் பேசுவான்.]

சுக்கிரீவன் நிலை

வாலி மனச் சமாதானம் பெற்று ராமனை வணங்கியதும், குற்றங்களைப் பொறுத்தருளுமாறு ராமனை வேண்டிக் கொண்டதும், சுக்கிரீவனைப் பிரமிக்கச் செய்திருக்க வேண்டும்.

வெற்றர(சு) எய்தி எய்பி
விட்டர(சு) எனக்கு விட்டான்!

என்று வாலி சொன்னதும், சுக்கிரீவன் ஏங்கித் திகைத்துப் போயிருக்க வேண்டும்.

'என் தம்பி ஏதாவது கெட்ட காரியம் செய்ய நேர்ந்தாலும் என்னை வதைக்கின்ற இந்த அம்பு என்ற யமனை அவன் மேல் ஏவி விடாதே, ராமா!' என்று வாலி வரம் வேண்டியதும், சுக்கிரீவன் திகைத்துத் திக்பிரமை பிடித்தவனாய் அண்ணன் அருகிலே வந்திருந்தான் என்று ஊகிக்கலாம்.

'அரக்கனை வாலில் கட்டிக் கொணர்ந்து பாத காணிக்கையாக ஒப்பிக்கவும் பாக்கியம் பெற்றேனில்லையே!' என்று வாலி ராமனை நோக்கித் தன் மனக் குறையை, அந்த மரண வேதனையோடு இதுவும் ஒரு வேதனை போல், வெளியிட்டுக் கொண்டதும், சுக்கிரீவன் 'ஐயோ!' என்று கதறத் தொடங்கியிருப்பான்.

அவ்வளவு வேதனையிலும் அதே மூச்சில் 'என் தம்பி சுக்கிரீவனையும் நீ உன் தம்பி லட்சுமணனைப்போல் நினைத்துக் கொள்ளவேணும்' என்று வாலி ராமனிடம் சொல்லும் போதே சுக்கிரீவன், 'ஆஹா, என்ன அன்பு மிகுதி!' என்று ஆற்றொணாத துக்கம் பெருக அழுது வருந்திய வண்ணமா யிருக்க வேண்டும்.

இந்த நிலையில் வாலி கை நீட்டித் தம்பியைத் தழுவி அணைத்துக்கொண்டு, 'வருத்தப்படாதே தம்பி!' என்று ஆறுதல் சொல்லுகிறான்.

ஞானத்திலே பங்கு

பிறகு ராமனைக்குறித்துத் தனக்கு ஏற்பட்டிருக்கும் மெய்யுணர்வைத் தம்பியுடன் பங்கிட்டுக் கொள்ள முயல்கிறான் :

மறைகளும், முனிவர் யாரும்,
மலர்மிசை அயனும், மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள், துணிவில் தூக்கி
அறைகழல் இராம னாகி,
அறநெறி நிறுத்த வந்த(து);
இறைஒரு சங்கை இன்றி
எண்ணுதி, எண்ணம் மிக்
கோய்.

[முனிவர் யாரும் - எல்லா முனிவர்களும். மலர் மிசை அயனும் - தாமரை மலரின்மீது வீற்றிருக்கும் பிரம்ம தேவனும். மற்றைத் துறைகளின் முடிவும் - (வேதங்களுடன்) வேறு ஞானத் துறைகளின் முடிவும். சொல்லும் துணிபொருள் - சொல்லுகின்ற தேர்ந்த பரம்பொருள்; துணிந்து அல்லது நிச்சயித்துச் சொல்லும் பரம்பொருள். துணிவில் - துண்டிக்கும் வில். அறை கழல் - ஒலிக்கின்ற வீரக் கழல். அற நெறி நிறுத்த - அறநெறியை நிலை நிறுத்த. இறை ஒரு சங்கை இன்றி — கொஞ்சமும் ஐயம் இல்லாமல். எண்ணுதி - எண்ணுவாய்; எண்ணத்தில் கொள்வாய்.]

சுக்கிரீவன் தன்னைக் காட்டிலும் ஆற்றலில் குறைந்தவனாயினும் ஆலோசனைத் திறமை மிகுந்தவன் என்பதை

வாலி ஒப்புக்கொள்கிருன். அதனல் தானே, தன்னல் அழிக்க முடியாத பெரும் பகைவனைத் தவருமல் அழிக்கக் கூடிய அருந்துணைவனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தான்? இந்த ஆலோசனை மிகுதியைச் சூட்சுமமாக்கி உள்ளுக்குள்ளே திருப்பிப் பார்த்துச் சுக்கிரீவனும் தன்னைப்போல் ராமனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது வாலி விருப்பம்.

அப்படி எண்ணிப் பார்க்கும்போது, பரம்பொருளே கோதண்டபாணியாகி வந்திருக்கிறது என்பது புலனுகுமாம். வேத வேதாங்க வேதாந்தங்கள் எல்லாம், பரமஞானத் துறைகளெல்லாம், 'இதுவே முடிவான பரம்பொருள்' என்று துணிந்து கூறும் அந்தக் கடவுளே ராமனுகி அறநெறியை நிலை நிறுத்த வந்திருக்கிருர் என்பதில் வாலிக்கு இப்போது அணுவளவும் ஐயமில்லை. இந்த நிச்சய புத்தி, ஆலோசனைத் திறமை வாய்ந்த தம்பிக்கும் ஏற்பட வேண்டும் என்பது வாலியின் கவலை.

புதுமைப் பெருவாழ்வு

தம்பி பாக்கியசாலி தான். இம்மையோடு மறுமை என்ற இருமையும் பெற்ற பாக்கியசாலி. தேடித் தவித்தும் காண முடியாத இறைவன் தானே தேடி வந்து அடையப் பெற்ற பேறு வாய்த்ததல்லவா தம்பிக்கு?

அருமைஎன், விதியி னுரே
உதவுவான் அமைந்த காலே?
இருமையும் எய்தி னய்!

[அருமை என் - அடைய அருமையானது என்னதான் இருக்கமுடியும். உதவுவான் அமைந்த காலே - உதவி செய்யப் பொருந்திய



போது. எய்தினாய் - அடையப் பெற்றாய்.]

என்று சுக்கிரீவனின் அதிர்ஷ்டம் குறித்து வியந்து, கொஞ்சமும் பொறாமையில்லாமல் குழந்தைபோலக் கொஞ்சிக் குலாவுகிறான் வாலி.

இனிமேல் சுக்கிரீவன் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே ஒன்று தான். அதாவது, ராம கைங்கரியம். ஒருமை யுள்ளத்துடன் அப்பணியில் தன்னை முழுக்க இழந்துவிட வேண்டியதுதான். மேம்பட்டு வாழ்வதற்கு அதுவே வழி என்கிறான் வாலி.

இப்பாட்டு முழுமையும் பார்ப்போம்:

அருமைஎன், விதியி னாரே
 உதவுவான் அமைந்த காலை?
இருமையும் எய்தி னாய்;மற்(று)
 இனிச்செயற் பால தெண்ணின்,
திருமறு மார்பன் ஏவல்
 சென்னியிற் சேர்த்திச், சிந்தை
ஒருமையில் நிறுவி, மும்மை
 உலகினும் உயர்தி அன்றே!

[இனிச் செயற்பாலது எண்ணின் - இனிமேல் செய்யவேண்டியது யாதென்று நீ எண்ணிப் பார்த்தால். திருமறு மார்பன் ஏவல் - திருமகளையும், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையும் மார்பில் உடைய திருமாலாகிய ராமனது கட்டளை. சென்னியின் சேர்த்தி - சிரஸால் வகித்து; தலைமேற்கொண்டு. நிறுவி - நிற்கச் செய்து. மும்மை உலகினும் - மூன்று உலகங்களிலும். உயர்தி - உயர்ந்து விளங்குவாய்.]

'ராம கைங்கரியத்திற்குக் கையும் ராமபக்திக்குச் சிந்தையுமாய்ப் புதுமைப் பெரு வாழ்வு வாழ்வாய்' என்று தம்பியை வாயார வாழ்த்திய பின், வாலி மேலும் ஹிதோபதேசம் செய்து, ராமனிடம் தம்பியையும் சுற்றத்தாரையும் அடைக்கலமாக ஒப்பிக்கிறான்:

என்னஇத் தகைய வாய
 உறுதிகள் யாவும், ஏங்கும்
பின்னவற்(கு) இயம்பி, நின்ற
 பேரெழி லானை நோக்கி,
'மன்னவற்(கு) அரசன் மைந்த!
 மற்றிவன் சுற்றத் தோடும்
உன்அடைக் கலம்'என்(று) உந்தி,
 உயர்கரம் உச்சி வைத்தான்.

[என்ன - என்று. இத்தகைய ஆய - இத்தன்மையனவான. பின்னவற்கு - பின்னவனுக்கு; தம்பிக்கு. இயம்பி - சொல்லி. பேரெழிலானை - மிக்க அழகு வாய்ந்த ராமனை; சுந்தரராஜனாகிய ராமனை. மன்னவர்க்கு அரசன் மைந்த - சக்ரவர்த்தியின் திருமகனே. மற்றஇவன் சுற்றத்தோடும் - இந்தச் சுக்கிரீவன் சுற்றத்தாருடனே. உந்தி - (ராமன் பக்கமாகச்) செலுத்தி. உயர்கரம் - உயர எடுத்த தன் கைகளை.]

* * *

'இவனும் இவன் சுற்றமும் உனக்கு அடைக்கலம்' என்று சொல்லிக் கொண்டே, தான் அணைத்துக் கொண்டிருந்த தம்பியை ராமன் முன்னிலையில் தள்ளுகிறான்.

பின்பு சுக்கிரீவனை நோக்கி, 'உன் செல்வப் பிள்ளையாண்டானை அழைத்துக்கொண்டு வா' என்கிறான்.

சித்திர ராமாயணம்

வாலிகாவியம்

ஸ்ரீ

342. வாலி மோட்சம்

துன்பத்தைக் கண்டறியாதவன். துன்பப்படுகிறவர்களையும் கண்டறியாத அரசிளங்குமரன். 'துன்பமா? அதெப்படி யிருக்கும்? கறுப்பா, சிவப்பா?' — இது இவன் மன நிலை.

பால் நிலவும், இரத்த வெள்ளமும்

இந்தச் செல்லப் பிள்ளையை இப்படி வளர்த்து விட்டான் காதல்-தந்தை. பிறந்த நாள் முதல் துன்பமுள்ளவர்களைப் பார்த்து விடாதபடி,— அவர்கள் எப்படி யிருப்பார்களென்று உள்ளத்தாலும் உணர முடியாதபடி. புத்தர்பிரானை அவர் தந்தை வளர்த்ததுபோல், வாலியும் தன் அருமை மகனை வளர்த்து வந்தான்.

வாலி போர் புரியப் புறப்படுமுன் உயர்ந்த மலர் மெத்தையில் படுத்திருந்தானே, அந்த நிலையில் பார்த்தவன் தான் — இப்போது இரத்த வெள்ளத்தில் அதே தந்தை கிடக்கக் காண்கிறான்.

சந்திரோதயம் போல வந்து தோன்றுகிறானும் அங்கதன். பால் நிலவு பொழியும் பச்சைப் பிள்ளை:

சுடருடை மதியம் என்னத்
தோன்றினன்.

[சுடருடை மதியம் என்ன— நிலாச் சுடர் வீசும் சந்திரனைப் போல.]

கேட்பானேன்? வாலி பிள்ளையல்லவா? அனுமன் வாலியை,


சந்திரன் தழைத்(து)
அனைய தன்மையான்

[தழைத்து அனைய — தழைத்தாற் போன்ற.]

என்று ஏற்கெனவே வருணித்திருக்கிறானல்லவா? களங்கமற்ற இளங்குமரனின் வளமார்ந்த தேஜஸும் வசீகரமும் எப்படி இருக்க வேண்டும்!

வீரத் தந்தையைச் செல்வக் குமாரன் வந்து காண்கிறானே, அந்தப் பரிதாபக் காட்சியை எவ்வளவு பரிவு தோன்றக் காட்டுகிறான் கவிஞன்:

சுடருடை மதியம் என்னத்
தோன்றினன், தோன்றி, யாண்டும்
இடருடை உள்ளத் தோரை
எண்ணினும் உணர்ந்தி லாதான்,
மடலுடை நறுமென் சேக்கை
மலையன்றி, உதிர வாரிக்
கடலிடைக் கிடந்த காதல்-
தாதையைக் கண்ணிற் கண்டான்.



[யாண்டும் — எப்போதும்; எவ்விடத்தும். இடர் — துன்பம். உடை — உடைய. எண்ணினும் — எண்ணினாலும்; நினைத்துப் பார்த்தாலும். உணர்ந்திலாதான் — உணர்ந்திருக்க முடியாதவன். மடல் — பூ இதழ். மடலுடை நறுமென் சேக்கை — பூ இதழ்களாலாகிய நன்மணம் வீசும் மென்மையான படுக்கை; மலர்ப் படுக்கை; புஷ்ப சயனம். சேக்கை மலை — படுக்கையாகிய மலை; உயர்ந்த மெத்தைப் படுக்கை. உதிரவாரிக் கடல்—இரத்த வெள்ளப் பெருக்கு. கடலிடை — பெருக்கினிடையே. தாதை — தந்தை.]

'என் அப்பா! அப்பா!' என்று கதறுகிறான், முதல் முதல் இப்போது தான் முழுத் துன்பத்தையும் அறிந்து கொள்ளும் பிள்ளை போல:

எந்தையே! எந்தை யே! இவ்
எழுதிரை வளாகத்(து)
யார்க்கும்
சிந்தையால், செய்கை யால்,ஓர்
தீவினை செய்தி லாதாய்!
நொந்தனை! அதுதான் நிற்க:
நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததே அன்றோ அஞ்சா(து)?
ஆர்அதன் வலிமை தீர்ப்பார்?

[எந்தையே - என் தந்தையே. எழுதிரை வளாகத்து - எழுகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூலோகத்திலே. செய்திலாதாய் - செய்யாதவனே. நொந்தனை - துன்பம் அடைந்தாய். அதுதான் நிற்க - அது அப்படியிருக்கட்டும். கூற்றம் - யமன். அஞ்சாது - அஞ்சாமல். தீர்ப்பார் - ஒழிக்க வல்லவர்.]

அங்கதன் வளர்ப்பு

துன்பம் அறியாமலே வளர்க்கப் பெற்றிருந்த இந்தப் 'பிள்ளையாண்டான்', சிந்தையாலும் தந்தை பிறருக்குத் தீங்கு செய்தறியாதவன் என்று நம்புகிறான். வாலி தன் தம்பி சுக்கிரீவனைத் துரத்திவிட்டு அவனுடைய சொத்துக்களையும் மனைவியையும் கவர்ந்து கொண்டான் என்பதை அங்கதன் உள்ளபடியே அறிந்து கொள்ள வில்லையா? இதை எப்படி நம்பமுடியும்? அத்தகைய பச்சைப் பிள்ளையா அங்கதன்?

முன்னாளில் பகைவர் சொத்துக்களையும் மனைவியரையும் பறித்துக் கொள்வது ராஜ தர்மத்திற்கு விரோதமென்று கருதப்பட வில்லை. வாலி கோஷ்டியினர், வாலி அப்படியெல்லாம் செய்ததை நிச்சயமாகப் பரிபூர்ணமாக ஆதரித்திருப்பார்கள். 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' போன்ற பகைவன் சுக்கிரீவன் என்பதாகவும் பிரஸ்தாபித்திருப்பார்கள். அந்த அபிப்பிராயங்களுக் கிடையே வளர்ந்து வந்த அங்கதன், அந்தச் செயல்களைத் 'தீவினை' என்று நினைத்திருக்க முடியாதல்லவா?

பிறருக்குத் தீங்கு செய்யாதவனுக்கு—தீங்கை நினைக்கவும் செய்யாதவனுக்கு, தீங்கு செய்யப்பட்டதே!—என்று அங்கதன் புலம்புகிறான். 'வஞ்சகன் வஞ்சிக்கப்படுவான்; பிறரை ஹிம்ஸிப்பவர் தாமே ஹிம்ஸிக்கப்படுவர்' என்பது சூட்சும நீதிதர்மம். அங்கதனோ, 'என்ன அநியாயம்! சிந்தையால் செய்கையால் ஒரு தீவினையும் செய்யாதவன் இப்படி நொந்து கிடக்கிறானே!' என்று கதறுகிறான்.

இது தான் கிடக்கட்டும். சாகக் கிடக்கும் புலியைக் கண்டாலும் ஆடு நடுங்குமே: அப்படியாவது நடுங்க வேண்டிய யமனும் அஞ்சாது வந்து விட்டானே வாலி முகம் நோக்கி! இந்த ரீதியிலும் அங்கதன் அலறுகிறான்.

'வாலி தவறு செய்யாதவன்; வெல்ல முடியாதவன்' என்ற அபிப்பிராயத்திலேதான் எப்படி ஊறி வளர்ந்திருக்கிறான் பிள்ளை!

வீரம் போல் பக்தி

உண்மையிலேயே வாலியின் வீரம் கொஞ்சமோ? 'மகாதேவனுடைய சந்நிதியில் தான் இந்தத் தலை வணங்கும்; மற்றப்படி வணங்கி அறியாது' என்று

னும் சிவாஜி. அந்த விதமாக வாலியை நோக்கி அங்கதனும்,

பஞ்சின்மெல் அடியாள் பாகன்
பாதுகம் அல(து), யாதும்
அஞ்சலித் தறியாச் செங்கை
ஆணையாய் !

[பஞ்சின்மெல் அடியாள் — பஞ்சு போல் மென்மையான பாதங்களுடைய உமாதேவி. பஞ்சின் மெல் அடியாள் பாகன் — பார்வதி தேவிக்கு இருப்பிடமான இடப் பாகத்தையுடைய சிவபெருமான். பாதுகம் — பாத குறடு என்ற திருவடிநிலைகள். அலது யாதும் — அன்றி வேறு எப்பொருளையும், எவரையும். அஞ்சலித்து அறியா—கும்பிட்டு அறியாத. செங்கை ஆணையாய் — செம்மையான கையில் ஆக்ஞா சக்ரம் உடையவனே.]

என்று, அந்த வணங்கா முடித் தனி நிலை புலப்படப் பேசுகிறான்.

வாலியின் ராம பக்தி

இப்படிப் பலவாறாக அங்கதன் கூறி வருந்தவும், வாலி அவனை மார்போடணைத்துக்கொண்டு, 'நீ வருந்த வேண்டியதில்லை அப்பா!' என்று தேறுதல் கூறுகிறான்:

'நீ இனி அயர்வாய் அல்லை'
என்றுதன், நெஞ்சிற் புல்லி,
'நாயகன் இராமன் செய்த
நல்வினைப் பயன்இ(து)'! என்
றான்.

[அயர்வாய் அல்லை — வருத்தப் படாதே. புல்லி — தழுவி. நாயகன் — தலைவன்.]

'என்றேனும், எப்படியேனும் மரணம் வரக்கூடியது தானே. எனது நல்வினைப் பயனன்றோ இந்த நன் முடிவை எனக்குத் தந்திருக்கிறது!' என்கிறான் வாலி.



இந்த இறுதிக் காலத்தில் தத்துவ ஞானமும் வந்து வாய்த்திருக்கிற தல்லவா வாலிக்கு? இதைத் தம்பியோடும் பகிர்ந்து கொள்ள விரும்பியவன் தன் ஏக புத்திரனுக்கு வழங்கமாட்டானா?

ஜனகபிதா இப்போது ஞானபிதாவும் ஆகி ஞானச் செல்வத்தை வாரி வழங்கும் அதிசயத்தைப் பாருங்கள்:

'பாலமை தவிர்நீ; என் சொல்
　பற்றுதி என்னின், ஐய!
மேலொரு பொருளும் இல்லா
　மெய்ப்பொருள்வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று,
　கட்புலக்(கு)உற்ற தம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
　மருந்தென வணங்கு, மைந்த!

[பாலமை — பாலர் தன்மை; (இங்கே) சிறுபிள்ளைத்தனம். தவிர் — நீங்கு; விட்டுவிடு. என் சொல் பற்றுதி என்னின் — தந்தையாகிய என்னுடைய சொல்லை உறுதியாகப் பற்றிக்கொள் வாயானால். மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் — 'ஸத்யத்திற்கு மேல் ஒரு பொருளும் இல்லை' என்று சொல்லப்பெறும் அதே ஸத்யம் என்ற பொருள். தரை தோய நின்று — தரையில் படும்படி நின்று. கட்புலக்கு உற்றது—கண்ணின் புலனுக்கு (காட்சிக்கு) இலக்காயிற்று. அம்மா — ஆச்சரியம். மால் தரும்—மயக்கம் தரும்.]

வசீகரமான கவிதை

'உண்மைக்கு மேல் ஒரு பொருளும் இல்லை' என்று கோஷிக்கிறது வேத முரசு. வேத வேதாந்தங்கள் இப்படி முழக்கிய போதிலும், அந்த உண்மையை வெகு வசீகரமாய்க் காட்டுவது கவிதை—மகா கவிகளின் 'தெய்வமாக் கவிதை'.

ஸத்தியம் சௌந்தரியமாக அவதரிக்கிறது கவிதையிலே. பீதாம்பரம் புழுதி படியாமல், எங்கேயோ விண்ணகத்தில் வீற்றிருக்கும் பரம்பொருளை மண்ணகத்தே கொண்டு வந்து 'கால் தரை தோய' நிறுத்தி விடுகிறது கம்பன் கவிதை.

அங்கத சரணுகதி

வாலி பேசிய அதிசயப் பேச்சும், முகத் தோற்றமும் குரலும், அங்கதனை அப்படியே வசீகரித்திருக்க வேண்டும். மறுபடியும் மகனை இறுக அணைத்துக் கொண்டு ராமனை நோக்கி,

பொய்அடை உள்ளத் தார்க்குப்
　புலப்படாப் புலவ!

[பொய்அடை உள்ளத்தார்க்கு - பொய் பொருந்திய உள்ளத்தவருக்கு. புலப்படா - அறியப்படாத. புலவ - ஞான சொரூபியே.]

என்று அழைத்து. 'இவன் உன் அடைக்கலம்' என்று ஒப்பிக்கிறுன்.

அங்கதன் வணங்குவதும், ராமன் அவனை அங்கீகரிப்பதும், வாலி மோட்சம் அடைவதும் எவ்வளவு வேகமாக நடைபெறுகின்றன!

தன்அடி தாழ்த லோடும்,
　தாமரைத் தடங்க ணனும்
பொன்உடை வாளை நீட்டி,
　'நீ இது பொறுத்தி' என்ருன்.
என்னலும் உலகம் ஏழும்
　ஏத்தின! இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்(கு)
　அப்புறத்(து) உலகன் ஆனுன்.

[தாமரைத் தடங்கணனும் — செந்தாமரை மலர் போன்ற பெரிய கண்களையுடைய ராமனும்; வணங்கிய அங்கதனைக் கண்டு அகமகிழ்ந்து கண்மலர்ந்து அன்பு காட்டிய ராமனும். பொன் உடைவாளை — அழகிய உடைவாளை. பொறுத்தி — ஏற்றுக் கொள்வாய். என்னலும் — என்று சொன்னதும். வானுக்கு அப்புறத்து — வானுலகங்களுக்கெல்லாம் அப்பாலுள்ள. உலகன் ஆனுன்—மோட்சலோக வாசியானுன்.]

அங்கத சரணுகதி, ராமன் அபயம், அகிலலோக குதூகலம், வாலி மோட்சம் எல்லாம் ஒரே பாட்டிலே.

சித்திர ராமாயணம்

வாலிகாவியம்

பி. ஸ்ரீ

343. வாக்கும் பொய், வாழ்வும் பொய்!

'ஒருவனுக்கு உணவு, மற்றவனுக்கு விஷம்' என்று இங்கிலீஷில் சொல்வதுண்டு. இங்கே ஒரு மருந்து ஒருவனுக்கு விருந்தாகி மற்றவனுக்கு நமனாகிறது. ஆம்; ராமன் என்ற மருந்தைக்கொண்டு வாலி மோட்சமடைகிறான்; மகன் வாழ்வு பெறுகின்றான். தம்பியும் வாழ்வு பெறுகிறான். உண்மையில், மூவருக்கும் ஒருங்கே நன்மை தருவதுதான் இம்மருந்து.

இன்ப மலையும் துன்ப அலைகளும்

அங்கதனைக் கட்டிக்கொண்டு, சுக்கிரீவன் கையைப் பிடித்துக்கொண்டு ராமன் வாலி இறந்த இடத்தை விட்டுப் போனான்.

வாலி மரணத்தைக் கேட்டு மனைவி அவன் மேல் விழுந்து புரளுகிறாள், புலம்புகிறாள் :

வேய்ங்குழல்,
விளரி நல்யாழ்,
வினையேன் (று)
இனைய நாண
ஏங்கினள்,
இரங்கி விம்மி
உருகினள், இரு
கை கூப்பித்
தாங்கினள் தலை
யில், சோர்ந்து,
சரிந்துதாழ்,
குழல்கள் தள்ளி,
ஓங்கிய துயரால்பன்னி
இனையன உரைக்கலுற்றாள்.



[வேய்ங்குழல் — புல்லாங் குழல். விளரி—ஒருவகை இசை. நல்யாழ் — சிறந்த யாழ் என்னும் இசைக் கருவி. இனைய—இவை போன்ற இன்னிசைகளெல்லாம். நாண — (இவளுடைய இனிய குரலுக்கு ஒப்பாக வில்லையே என்று) நாணும்படி. இரங்கி—பரிதவித்து. சரிந்து தாழ் குழல்கள் தள்ளி — சரிந்து தொங்கும் கூந்தல் புரளப் பெற்றவளாய். பன்னி உரைக்கலுற்றாள் — அடுத்தடுத்துச் சொல்லத் தொடங்கினாள்.]

'இன்பமலை மேலே இனிது வாழ்ந்தேன், துன்பக் கடலுக்குள் துள்ளி விழுந்தேனே!' என்று தாரை புலம்பத் தொடங்குகிறாள் :

வரைசேர்
தோளிடை
நாளும்
வைகுவேன்,
கரைசேராஇடர்
வேலை
கண்டிலேன்
உரைசேர்
ஆருயி-
ரே!என்
உள்ளமே!
அரசே!
யான்இது
காண
அஞ்சினேன்.

[வரைசேர் தோளிடை — மலை போன்ற தோளின் ஆதரவிலே. நாளும் வைகுவேன் — (மணந்த நாள் தொட்டு இந்நாள் மட்டும்) எந்நாளும் இனிது தங்குவேன். கரை சேரா இடர் வேலை - கரை இல்லாத துன்பக் கடல். கண்டிலேன் - காணுதிருந்தவளான நான். உரைசேர் - புகழ் பெற்ற. என் உள்ளமே - என் உள்ளம் போன்றவனே.]

வாலியின் வலிமையை அரணுகப் பெற்றிருந்த தாரை இதுவரையில் கரையில்லாத துன்பக் கடலைக் கண்டதேயில்லை. இப்போதோ அந்தக் கடலுள் ஆழ்ந்து கொண்டிருக்கிறுள்! 'இது காண அஞ்சினேன்' என்று, இவன் வாலி மரணத்தை வாய்விட்டுச் சொல்லவும் அஞ்சுகிற இந்த அச்சம், உள்ளபடியே ஆழ்கடலுள் ஆழ்ந்து கொண்டிருக்கும் பயங்கரம் தான்!

'என்ன, துன்பத்தையே இவளும் அங்கதனைப் போல் அறிந்தவள் இல்லையா?' என்று திகைக்க வேண்டாம்.

கரைசே ராஇடர்
வேலை கண்டிலேன்

என்று தானே சொல்கிறுள்.

வாலி இறக்கு முன்பும் சில சமயங்களில் துன்பங்களை அடைந்தவள்தான். ஆனுல் அவை கரையேறக் கூடிய கடல்; கரை சேர முடியாத இடர்க் கடல் அல்ல.

மலைமேல் ஆடிக் கொண்டிருந்த மயில் கடலுள் வீழ்ந்து ஆழ்ந்து கொண்டிருக்கும் அதிபரிதாபம் இது.

கண்ணீருக்கிடையே ஒரு காதல் காட்சி

இந்தத் துன்பக் காட்சி என்ன, இப்போது இவள் உள்ளத்திலே தோன்றும் அந்தப் பழைய இன்பக் காட்சி தான் என்ன?

காதலனும் காதலியும் உல்லாஸமாக உரையாடிக் கொண்டிருக்கிறுர்கள். ஓர் இரவிலே, பால் — நிலவிலே — என்று ஊகிக்கலாம்.

வாலி போரில் பெரும் புகழ் பெற்று வந்திருக்கிறுன். அந்த வீரத் தோள் பூரிக்கக் காதலியைத் தழுவி, 'நீ எப்போதும் எங்கே இருக்கிறுய் தெரியுமா?' என்று ஒரு கேள்வி கேட்கிறுன்.

'நானு? எங்கேயா? இங்கேதான் — இந்தக் கிஷ்கிந்தாபுரியில்தான், வாலியார் அரண்மனை நிலா முற்றத்திலே தான் — இருக்கிறேன். இதுகூடத் தெரியாதவளையா நீங்கள் மணந்து கொண்டீர்கள்?'

'அட பைத்தியமே! எத்தனையோ அரசியல்—விவகாரங்களெல்லாம் தெரிந்தவளுக்கு இது தெரியவில்லையே! நீ எப்போதும் இருப்பது என் சிந்தைக்குள்ளே!'

'உங்களுக்குத் தான் தெரியவில்லை! நீங்களல்லவா என் உள்ளத்திற்குள் இருக்கிறீர்கள்?'

அந்தக் காதலர்—விவகாரம் எப்போதும் தீராத விவகாரமாகவே தோன்றியது. ஆனுல் இப்போது தீர்ந்து விட்டது; தீர்ந்தே போய்விட்டது!

தாரை புலம்புகிறுள், 'நாம் இருவரும் பொய்த்துப் போனேமே!' என்று:

செருவார் தோளா! நின்
சிந்தை யுளேன்எனின்,
மருவார் வெஞ்சரம்
எனையும் வௌவுமால்;
ஒருவேன் உள்உளை—
யாகில் உய்தியால்;
இருவேம் உள்இரு—
வேம்இ ருந்திலேம்!

[செரு ஆர் தோளா — போர்த் தொழிலை நிரம்பப் பயின்று வெற்றி பெற்ற வீரத் தோள்களையுடையவனே. நின் சிந்தை உளேன் எனின்—(நீ அன்று சொன்னபடி) நான் உன் சிந்தைக்குள் இருந்தேன் என்பது உண்

சரம் — எதிரியின் கொடிய பாணம். எனையும் வௌவுமால் — என்னையும் உருவி உயிர் வாங்கி யிருக்குமே! ஒருவேன் உள் உளையாகில் — (உன் மாணத்தால் இப்போது) தனிப்பட்டவளாக இருக்கும் என் உள்ளத்திற்குள் நீ இருப்பதாக நான் அன்று உறுதி கூறியது உண்மையாக இருந்தால். உய்தியால் — (நீயும் என்னைப் போலவே அந்தக் கொடிய அம்பினுல் உருவப்படாமல்) தப்பிப் பிழைத்திருப்பாய். இருவேம் உள் இருவேம் இருந்திலேம் - நாம் இருவரும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இருந்ததில்லை.]

'ஒருவர் உள்ளே ஒருவர் இருப்பதாக அன்று மனோராஜ்யம் செய்தோமே, உண்மையில் இருவர் உள்ளத்தும் இருவரும் இருந்தோமில்லை. ஆகவே நாம் இருவர் சொன்னதும் பொய்தான்!' என்று புலம்புகிறுள் தாரை.

இந்தத் தாரை புலம்பல் வடமொழியிலுள்ள பிரசித்தி பெற்ற 'ரதி பிரலாப'த்தைத் தழுவியது. கருத்தில் மட்டுமல்ல, அந்தச் சுலோகத்திலுள்ள பண்ணழகு இந்தப் பாட்டிலும் அப்படியே அமைந்திருக்கிறது.

போனது கூடத் தாரைக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை.

ஐயா நீஎன(து)
 ஆவி என்றதும்
பொய்யோ? பொய் உரை—
 யாத புண்ணியா!

என்ற பிரலாபத்தைக் கேளுங்கள். 'சத்தியவாதியான வாலி வாக்கும் பொய்த்துப் போகலாமா?' என்பதுதான் இப்போது தாரையின் கவலை.

அந்த எச்சரிக்கை!

சுக்கிரீவனுடன் வாலி போர் செய்யப் புறப்பட்டானே, அப்போது தாரை எச்சரிக்கை செய்தாள் அல்லவா? அந்த வார்த்தையை மட்டும் வாலி ஏற்றுக் கொண்டு ஜாக்கிரதையாக நடந்து கொண்டானுனல், எவ்வளவு காலம் கவலையற்ற பெருவாழ்வு வாழ்ந்திருக்கலாம்!



சொற்றேன் முந்துற;
அன்ன சொற்கொளாய்,
'அற்றுன் அன்னது
செய்க லான்' எனு,
உற்றுய் உம்பியை,
ஊழி காணும் நீ
இற்றுய்; யான்உனை
என்று காண்கெனே?

[சொற்றேன் முந்துற - முன்னமே சொன்னேனே. அன்ன சொற்கொளாய் - அந்த வார்த்தையை நீ கொள்ளாமல். அற்றுன் - அந்த ராமன். அன்னது செய்கலான் - அந்தச் செய்கையைச் செய்ய மாட்டான். எனு - என்று சொல்லி. உற்றுய் உம்பியை - உன் தம்பியை அடைந்தாய். ஊழி காணும் நீ இற்றுய் - நெடுங் காலம் இறவாது இருக்கக் கூடிய நீயும் இறந்து விட்டாயே. காண்கெனே — காண்பேனே.]

நிஜ வாலியா, போலி வாலியா?

இந்தச் சோக வெறியிலே 'இங்கே செத்துக் கிடப்பவன் வாலி இல்லையோ!' என்ற பிரமை கூட ஏற்படுகிறதாம். இறந்து கிடப்பவன் நீ அன்றி வேறே ஒரு வாலிதானே? உண்மை—வாலியாக இல்லாமல் தோற்றத்தில் வாலி போலுள்ள வேருெரு ஆசாமி தானே? யாரோ ஒரு போலி வாலியோ?—என்ன பைத்தியம்!

நீரும் மேருவும்
நீநெ ருக்கினுல்!
மாருேர் வாளிஉன்
மார்பை ஈர்வதோ?
தேறேன் யான்இது,
தேவர் மாயமோ?
வேருேர் வாலிகொ —
லாம்வி ளிந்துளான்!

[நீரும் மேருவும் — மாமேரு மலையும் நொறுங்கித் தூள் தூளாய்ப் போய் விடுமே. நீ நெருக்கினுல் — நீ உன் மார்புடன் சேர்த்து இறுக்கி நெருக்குவாயானுல். மாறு ஓர் வாளி உன் மார்பை ஈர்வதோ — அப்படிப்பட்ட மார்பையும் எதிராக வந்து ஓர் அம்பு பிளக்க வல்லதோ. தேறேன் யான் இது — (நீ அம்பு உருவி இறந்து கிடப்பது உண்மையோ, தோற்றமோ என்று நான் இதை) தெளிந்து கொள்ள இயலவில்லை. வேருேர் வாலி கொலாம் — வேருெரு வாலி தானே. விளிந்துளான் — (இங்கே) இறந்து கிடக்கிறவன்.]

'நின் சிந்தை உளேன்' என்று வாலி சொன்னது மட்டுமா பொய்யாகத் தோன்றியது. வாலி செத்துக் கிடப்பதும் பொய்த்துக் கிடப்பது போலவே தோன்றுகிறதாம் தாரைக்கு.

* * *

'தாரை புலம்பல்' என்ற பகுதியில் சில சிறந்த செய்யுள் மணிகள் காணப்படுகின்றன; புல்லாங்குழலும் வீணுகானமும் நாணும்படி ஏங்கி இரங்கி விம்மி உருகிய அந்தக் குரல் அப்படியே பதிவு செய்யப் பெற்றிருப்பது போலக் காண்கிறது இந்த 'இசைத் தட்டு' களிலே!

'நம்முடைய மிக்க இனிமை வாய்ந்த பாடல்கள் மிகுந்த சோக சிந்தனைகளை வெளியிடும் பாடல்கள்' என்றுர் ஓர் ஆங்கில அறிஞர். தமிழிலும், தாரையின் 'ஓங்கிய துயரால்' கவிதையும் ஓங்கி வளர்ந்திருக்கிறது. தாரை கண்ணீரும் வளர்த்து விட்டிருக்கிறது கவிதைப் பயிரை.

மேன்மேலும் ஓங்கிய துயரத்தோடு ஒன்றுபட்டுத் தாரை மூர்ச்சித்துப் போனுள். அவளுடைய தாதியரைக் கொண்டு அவளை இருப்பிடம் சேர்ப்பித்தபின் அனுமன் இறந்த வாலிக்கு அங்கதனைக் கொண்டு ஈமக்கடன் முழுவதும் செய்வித்து விவரத்தை ராமனிடம் தெரிவித்தான்.

வாலி வாழ்வும் பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதையாய்ப் போக, கிஷ்கிந்தாபுரியில் புதிய அரசியல் ஏற்படப் போகிறது. அடுத்த கட்டுரை: 'மகாராஜா.'

344. மகாராஜா

சுக்கிரீவனுக்கு முடி சூட்டும்படி ராமன் லட்சுமணனுக்குக் கட்டளையிடுகிறான். பட்டாபிஷேக காரியத்திற்கு வேண்டும் பொருள்களைக் கொண்டு வரும்படி லட்சுமணன் அனுமனுக்குக் கூறுகிறான். அப்படியே அபிஷேக தீர்த்தம், பொன்முடி முதலிய உபகரணங்களை யெல்லாம் அனுமன் சித்தம் செய்கிறான்.

பட்டாபிஷேகம்

சூரியோதயம் ஆனதும் சுக்கிரீவ பட்டாபிஷேகம் அமைதியாக, வைதிகமாக நடைபெறுகிறது:

மறையோர் ஆசி
வழங்க, வானுளோர்
நறைதோய் நாள்மலர்
தூவ, நன்னெறிக்(கு)
இறையோர் முன்வினை
செய்ய, ஏந்தலைத்
துறையோர் நூல்முறை
மௌலி சூட்டினான்.

[மறையோர் - (இங்கே) வானர பிராமணர்கள். வானுளோர் - தேவர்கள். நறை தோய் - தேன் ததும்பும். நாள் மலர் - அன்றலர்ந்த பூக்கள். நன்னெறிக்கு இறையோர் - சன்மார்க்கத் தலைவர்கள். முன்வினை செய்ய - முன்னே இருந்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய. ஏந்தலை - பெருமையில் சிறந்த சுக்கிரீவனை. துறையோர் நூல்முறை - அறத் துறையில் நிற்பவர்கள் கூறிய நூல் முறைமைப்படி. மௌலி - கிரீடம்.]

பக்தியும், தோழமையும்

அரசனான சுக்கிரீவன் தான் புனைந்துகொண்ட பொன்மாமுடியை ராமன் திருவடிகளில் காணிக்கை வைப்பது போல வைத்து அடிபணிவதும், ராமன் அவனைப் பளிச்சென்று தூக்கியெடுத்துத் தன் திரு மார்பிலே தோழனாகத் தழுவிக் கொள்வதும், பிறகு தானே ஆசாரியனாகி விட்டதுபோல் அரச நீதி போதிக்கத் தொடங்குவதும் எவ்வளவு அழகான, உருக்கமான, காட்சியாக நடைபெறுகின்றன பாருங்கள்:

பொன்மா மௌலி
புனைந்து, பொய்யிலான்
தன்மா னக்கழல்
தாழும் வேலையில்,
நன்மார் பில்தழு -
வுற்று நாயகன்
சொன்னான், முற்றிய
சொல்லின் எல்லை
யான்.



[பொன் மாமௌலி - பொன்மயமான சிறந்த கிரீடம். பொய்யிலான் - ஸத்திய மூர்த்தியான

ராமன். பொய்யிலான் தன் - ராமனுடைய. மானக் கழல் - பெருமைவாய்ந்த திருவடிகளில். தாழும் வேலையில் - தாழ்ந்து வணங்குமளவில். தழுவுற்று - தழுவிக்கொண்டு. நாயகன் - தலைவனுகிய ராமன். முற்றிய சொல்லின் எல்லையான் - நிரம்பிய சொற் செல்வத்தின் எல்லை கண்ட ராமன்.]

சுக்கிரீவனின் வசிஷ்டர்!

'சுக்கிரீவ, நீ கிஷ்கிந்தைக்குப்போய் அங்கதனை இளவரசாகக் கொண்டு ஆட்சி புரிவாயாக' என்று பீடிகையாகச் சொல்லி விட்டு, பட்டாபிஷேக காலத்திலே புதிய அரசனுக்கு நீதி-போதம் செய்யும் சம்பிரதாயப்படி ராமன் சில உறுதி மொழிகள் கூற விரும்புகிறான். தன்னுடைய பட்டாபிஷேகம் தடைப்பட்ட அந்தக் காலத்திலே முடி சூட்டு வைபவம் நிச்சயிக்கப் பெற்றதும், தசரதரின் வேண்டுகோளுக்கிணங்க வசிஷ்ட முனிவர் நீதிபோதம் செய்தாரல்லவா?

வசிஷ்டர் தம் பேரறிவுக்கு இணங்க ஒரு புதுமையான அரசியல் - லட்சியத்தைச் சுட்டிக் காட்டினர். ராமனே இங்கே தன் சொந்த அனுபவத்தை ஒட்டிப் பேசுகிறான்.



கூனி கற்பித்த பாடம்

ஒரு கூனி கெடுத்த கேடு எத்தகைய அனர்த்த பரம்பரையை நீளத் தோற்று வித்து விட்டது! அந்த நிகழ்ச்சிக்குப் பின்னே, பின்னே, கால வெள்ளத்தை எதிர்த்துப் போகிறது ராமனுடைய நினைவு!

ராமன் 'சிறு பிள்ளை, ஒரு நாள் கையிலே சிறுவில்லும் களி மண் உண்டையும் வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறான். அதாவது, உண்டையை வில்லால் எய்து இஷ்டப்பட்ட இலக்குகளில் செலுத்திப் பார்க்கிறான். 'குறி தவறாமல் அடிக்கிறோமே' என்ற எக்களிப்பு.

அப்போது வருகிறாள் கூனியம்மாள். மந்தரைதான் பெயர். இளைய ராணியான கைகேயியின் வேலைக்காரியாக இருந்த போதிலும் மந்தரையைக் கூனியென்றே பொதுமக்கள் கூசாது குறிப்பிடுகிறார்கள். அந்த முதுகுக் கூனை ராமன் பார்த்ததும், அதைக் குறி வைத்து மண் உண்டையை எய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ஆசையை அடக்க முடியவில்லை!

உண்டை குறிதவறாமல் கூனைத் தாக்கவே, ஒரே உத்ஸாகம் பிள்ளைக்கு, 'போச்சுது கூன்!' என்று. அவளோ, 'அடடா, இந்தக் கோசலை பிள்ளைக்கு இவ்வளவு குறும்பா? நான் கூனியென்றல்லவா பரிகசிக்கிறான் பிள்ளையாண்டான்?' என்று தவறாக நினைத்துக் கொள்கிறாள். 'பூனைக்கும் ஒரு காலம் வரும்' என்று கறுவு கொண்டிருக்கிறாள்.

அதனால் தானே ராம பட்டாபிஷேகம் நிச்சயமானதும், கோபதாபத்திற்குத் தூபதிபம் போட்டுக் கொள்கிறாள் கூனி அலங்காரி!

சுக்கிரீவனுக்கும் அதே பாடம்

இந்த நினைவு இப்போது ராமனுக்கு வந்ததும், கூனியின் கொடுமையை எவ்வளவு தூரம் பொறுமையுடன் - அன்புக் கண்ணால் - பார்க்க முடியுமோ, அவ்வளவு தூரம் பார்க்கிறான்; பேசுகிறான் சுக்கிரீவனிடம்:

சிறியர்என்(று) இகழ்ந்து நோவு
 செய்வன செய்யல். மற்(று)இந்
நெறிஇகந்(து) யான்ஓர் தீமை
 இழைத்தலால், உணர்ச்சி
 நீண்டு
குறியதாம் மேனி ஆய
 கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி நொய்தின்,
 வெந்துயர்க் கடலின் வீழ்ந்
 தேன்.

[நோவு செய்வன செய்யல் - துன்பம் தரும் செயல்களைச் செய்யாதே. இந் நெறி இகந்து - இந்த அஹிம்ஸை நெறியை நான் கடந்து. உணர்ச்சி நீண்டு குறியதாம் மேனி ஆய - உணர்ச்சி நீண்டு உருவம் குறுகி யிருந்தவளான. குவவுத் தோளாய் - திரண்ட தோள்களையுடைய சுக்கிரீவனே. வெறியன எய்தி - வெறுமையை அடைந்து. நொய்தின் - எளிதில்; லகுவாக.]

எளியரென்று இகழ்ந்து எவருக்கும் ஹிம்ஸை செய்யாமல் இருக்க வேண்டும் என்பது தான் இங்கே ராமன் புத்திமதி. கூனல் முதுகில் எய்த மண் உண்டை, ராமனைச் சிங்காதனத்திலிருந்தும் தள்ளிப் பரம தரித்திரம் என்ற படுகுழியிலே வீழ்த்தி விடுகிறதாம்.

எப்படிப்பட்ட தரித்திரம் பாருங்கள். உண்ணச் சோறு, உடுக்க உடை, ஒதுங்கக் குடிசை என்ற மூப்பெருந்தேவைக்கும் வழியில்லாத வனவாசமல்லவா?

கூனியம்மாளைத்தான் எவ்வளவு நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான் ராமன்! அந்தக் 'கூன்கொண்டு' குறுகிய மேனியைப் போல் அந்த உணர்ச்சி-நீளத்தையும் அளந்து கண்டு கொண்டதுபோல், 'உணர்ச்சி நீண்டு குறியதாம் மேனி' என்கிறான். தனக்கு நேர்ந்த நீண்ட அனர்த்த பரம்பரையையல்லவா அளவுகோலாகக் கொண்டு

அவைக்து காட்டுகிறான், 'பார் அப்பா சுக்ரீவா!' என்று.

ராமன் அடைந்த வறுமை அல்லது வெறுமை, 'வெறியன' என்று குறிக்கப் படுவதைத் தான் பாருங்கள். எத்தனையோ உடைமைகளை இழந்ததற்கு ஈடுபோல் எத்தனையோ வெறுமைகள், இல்லாமைகள்! ராஜபோகம் இல்லாமை மட்டுமா? முப்பெருந் தேவைகள் இல்லாதது மட்டுமா? வாகனம் முதலான ஒரு வகை வாழ்க்கை வசதியும் இல்லையே!

கூனிக் குறுகிக் கிடக்கும் மேனியிலும் — ஏன், விசேஷமாக அத்தகைய ஆசாமிகளிடமே—அவமதிப்பை உணர்ந்து கொள்ளும் உணர்ச்சி நீண்டு கிடக்கும் என்பது எவ்வளவு அனுபவ சித்தமான விஷயம்!

இத்தகைய 'திருமேனி'கள் சொற்ப அவமதிப்பையும் மறந்து விடாமல் எத்தகைய கொடுமைகளை இழைத்துவிட முடியும் என்பதும் அனுபவ சித்தமே. எவ்வளவு வலிமை வாய்ந்த பகையரசனும் அசைக்க முடியாத அயோத்தி ராஜ பதவியையும் லகுவாய்ப் புரட்டித் தள்ளிவிட்டானே கூனி!

தோழர் பிரிவு

இப்படி யெல்லாம் நீதி போதம் செய்தபின் ராமன், 'மாரிக்காலம் கழிந்தவுடன் உன் பெருஞ் சேனையோடு வருவாயாக' என்கிறான். கிஷ்கிந்தா நகரத்திற்குள் வந்து வசிக்கும்படி சுக்கிரீவன் பிரார்த்தித்தும் ராமன் இணங்கவில்லை.

ராமன் அங்கதனை நோக்கி, 'நீ உன் சிறிய தந்தையின் பின் செல்வாய்' என்று அறிவு கூறி அனுப்பி வைத்து, அநுமனையும் சுக்கிரீவனுக்குத் துணை புரியுமாறு விடையளித்து அனுப்புகிறான். அப்பால் ராமன் அந்த மலையை விட்டு வேறொரு குன்றையடைந்து அங்கே தம்பியுடன் வாழத் தொடங்குகிறான்.

மகாராஜாவின் ஆட்சி

கிஷ்கிந்தைக்குச் சென்ற சுக்கிரீவன் தாரையை வணங்கி ஆசி பெற்றுச் சிறப்பாக அரசு புரிகின்றான்:

ஆரியன் அருளிற் போய்,அவ்
 அகல்மலை அகத்த னைய
சூரியன் மகனும், மானத்
 துணைவரும் கிளையும் சுற்றத்,
தாரையை வணங்கி, 'அன்னாள்
 தாயெனத். தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே என்னச்'
 செவ்விதின் அரசு செய்தான்.

[ஆரியன் - சிறந்தவனான ராமன். அருளின் போய் - அருளினால் போய்; கட்டளையால் சென்று. அகல் மலை அகத்தனைய - அகன்ற கிஷ்கிந்த மலையின் உள்ளிடத்தை யடைந்தவனான. சூரியன் மகனும் - சூரிய புத்திரன் என்று சொல்லப்படும் சுக்கிரீவனும். மானத் துணைவரும் - பெருமை வாய்ந்த துணைவர்களான மந்திரிகள் முதலானவர்களும். கிளையும் - உறவினரும். சுற்ற - தன்னைச் சூழ்ந்து நிற்க. அன்னாள் தாயென - தமையன் மனைவியான அவளே தனக்குத் தாயெனச் சொல்லும்படி. தந்தை, முந்தைச் சீரியன் சொல்லே என்ன - தனக்கு முன் பிறந்த சிறப்புள்ள வாலியின் சொல்லே தனக்குத் தந்தை என்று சொல்லும் படி. செவ்விதின் - செம்மையாக.]

தமையனான வாலியோ இறந்து போய் விட்டான். தமையனைத் தந்தையாக மதித்து வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்று வருந்திய சுக்கிரீவன், அவன் மரணமடையும் போது தன்னை நோக்கிச் சொன்ன சொல்லை அனுசரித்து நடப்பதையாவது பித்ரு வாக்கிய பரிபாலனமாகக் கொள்ள வேண்டுமென்று துணிகின்றான்.

இந்த ரீதியில் வாலி வார்த்தையைத் தந்தையென்று கொண்டு, வாலி மனைவியாகிய தாரையைத் தாயாக மதித்து அரசுபுரியத் தொடங்கியவன், அங்கதன் இளவரசு புரியத் தன் ஆணை 'ஸுக்ரீவாஜ்ஞை' என்றவாறு இனிது செல்லக் கிஷ்கிந்தையில் வீற்றிருக்கிறான்.

சித்திர ...ராமாயணம்

345. இருண்ட வானமும், மருண்ட நெஞ்சும்

தட்சிணாயனம் பிறந்து சூரியன் தென்புறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்கிறது. வானர வீரர்களுக்கு முன்பே அந்தத் திசையை நோக்கிக் கிளம்பி விட்ட ஒரு ராமதூதன் போலே!

வெயில் மெலிந்தது

கார்காலம். நீர் கொண்ட கரிய மேகங்கள் வானவீதியெங்கும் பரவுகின்றன:

மையெடுத்(து) ஒத்தது
மழைத்த வானமே.

[மை எடுத்து ஒத்தது - மை பூசினாற் போன்றது. மழைத்த வானம் - மழை மேகங்களைக் கொண்ட வானம்.]

வானத்திலே மையைக் கொட்டியது போல் மேகங்கள் பரவ, வெயிலின் உக்கிரம் குறைகின்றது:

விண்ணகம்
இருண்டது;
வெயிலின்
வெங்கதிர்
தண்ணிய,
மெலிந்தன;
தழைத்த மேகமே.

[விண்ணகம் - வானத்தின் இடம். வெங்கதிர் - உஷ்ணமான கிரணங்கள். தண்ணிய - குளிர்ச்சியடைந்தனவாய். மெலிந்தன - உக்கிரம் தணிந்தன. தழைத்த மேகமே - இந்த விதமாக மேகங்கள் தழைத்தன, செழித்துப் பரவின.]



உள்ளத்திலே ஒரு விஷக்குளிர்

வெயிலின் வெங்கதிர்கள் மெலிந்து குளிர்ந்து வீசியபோதிலும், ராமனுடைய உடம்பு ஏனிப்படி நடுங்க வேண்டும்? இந்தக் குளிர், இருண்ட வானத்தைக் கண்டதும் உள்ளம் கொண்ட குளிர்தான்!

நஞ்சுண்ட நடுக்கம் போலக் காண்கிறது, அந்த நஞ்சு, வானத்தையும் உண்டுதான் அப்படிக் கருநீலமாக்கி விட்டதோ?

யாத்திரைகள்

இந்த நினைவு மாறி, எங்கேயோ நெடுங்கடலில் யாத்திரை நடக்கிறது. மரக்கலம் தகர்ந்து நடுக்கடலில் அந்தக் குளிர்ந்த நீரில் மூழ்கிப் போவதுபோல் ஓர் உணர்ச்சி உண்டாகிறது.

நஞ்சைத் தின்று சாவதென்றாலும், 'உறுதியாகத் தாங்கும் தரையில் சாகி



ளோம்' என்ற எண்ணமாவது உண்டு. ஆனால் இந்தக் குளிர்ந்த பெருங் கடலில் அத்தகைய இருப்புக்கும் இறப்புக்கும் இடம் இல்லையே!

திடீரென்று நெடுங்கடல் - யாத்திரை ஜலமார்க்க யாத்திரையாகி, ராமனைச் சீதை சிறை யிருக்கும் இடத்திற்கும் கொண்டு போகப் பார்க்கிறது. ஆனால் அதற்கும் முன்பே, 'சீதை அஞ்சனம் எழுதிய கண்களால் கண்டு காதலித்த' அந்த இளம் பருவ காலத்திற்கும் களத்திற்கும் கொண்டு போகிறது.

அந்தக் காலமும் இந்தக் காலமும்

அந்த அஞ்சன நயனம் நஞ்சுபோல ஹிம்ஸித்ததாய்க் காதலன் கருதியதும் உண்டு. அஞ்சனம் என்று நஞ்சுதான் தீட்டிக் கொண்டனவோ அந்தக் கண்கள்—அந்தக்கண் பார்வைகளாகிய அம்புகள், வாள்கள், ஈட்டிகள்? என்றாலும் அதே கண்கள் அமுதமாகவும் இனிமை செய்தன, குளிர்வித்தன காதலன் உள்ளத்தை! ஆனால் இப்போதோ?

ராட்சஸ பூமியிலே சிறைச்சாலையில், கண்ணீர் பெருகும் கண்கள், அவிழ்ந்து அலங்கோலமாய்த் தொங்கும் கூந்தல். காவல் செய்யும் வஞ்சனை அரக்கர்கள்.

அடடா, அவர்கள் என்ன பேய்க் கறுப்பு!

வடிவில் மட்டுமோ அட்டக்கரியர்கள்? செய்கையோ மேலும் கறுப்பு; கை தொட்டதெல்லாம் கரி! இத்தகைய கருங் கொடுஞ் செயல்களைத் தூண்டி விடும் நெஞ்சக் கறுப்பையோ — சொல்லவா வேண்டும்?

இவை யெல்லாம் மானஸக் காட்சிகள். எல்லாம் இருண்ட வானம் செய்து காட்டும் இந்திர ஜாலங்கள்:

நஞ்சினின், நளிர்நெடுங் –
  கடலின், நங்கையர்
அஞ்சன நயனத்தின்,
  அவிழ்ந்த கூந்தலின்,
வஞ்சனை அரக்கர்தம்
  வடிவின், செய்கையின்,
நெஞ்சினின், இருண்டது
  நீல வானமே.

[நஞ்சினின் - நஞ்சு போல. நளிர் - குளிர்ந்த. கடலின் - கடல் போல. நயனத்தின் - கண்கள் போல. கூந்தலின் - கூந்தல் போல. அரக்கர் தம் வடிவின் - ராட்சஸ வடிவங்கள் போல. செய்கையின் - செய்கை போல. நெஞ்சினின் - நெஞ்சு போல.]

வானத்திலே அடர்ந்து கிடந்த கான மேகங்கள் விஷம் போலத் தோன்றுகின்றன ஒரு சமயம். ஜிலு ஜிலு வென்று குளிர்ந்த கரு நெடுங் கடல் போலக் காண்கின்றன ஒரு சமயம்.

திடீரென்று சில மேகங்கள் நங்கையர்-வேஷம் போட்டுக் கொள்கின்றன, அஞ்சனம் தீட்டிய நயனங்களுடன். உள்ளப் புதையலை வெளிக் காட்டும் — அஞ்சனமா? மறைத்து மயக்கும் அஞ்சனமா? நங்கையர் மறைந்து, நங்கையாகிய சீதை மட்டும் தோற்றம் அளிக்கவும் செய்கிறாள். இப்போதுள்ள அலங்கோல நிலையில் அல்ல; அன்றிருந்த அலங்கார நிலையில்தான்.

அந்தக் காலம் எங்கே? கவிழ்ந்த முகமும் அவிழ்ந்த கூந்தலுமா யிருக்கும் இந்தக் காலம் எங்கே? இப்போதுள்ள சீதையைத்தான் அதோ அந்த மேகம் எப்படிப் படம் பிடித்துக் காட்டுகிறது!

இப்போது நங்கை மேகத் திரையில் மறைந்து போக, அந்த மேக நாடகம் நங்கையை வஞ்சித்த அரக்கர்களை மேடையில் தோற்றுவிக்கிறது. சீதையை வஞ்சித்துக் கவர்ந்து சென்ற அந்த வஞ்சனை - அரக்கனும் அவனுடைய பரிவாரங்களும், 'ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே' என்று கூத்தடிக்கிறார்கள்.

கரிய வடிவினர், மிகக் கரிய செயலினர், மிகமிகக் கரிய வஞ்ச நெஞ்சினர்.

அங்கும் ஒரு போர்க்களமா?

இருண்ட வானத்தைக் கிழித்துக் கொண்டு மின்னுகின்றன மின்னல்கள், — திசைகளெல்லாம் ராமனை நோக்கிச் சிரிப்பது போல.

கார்காலமாகிய கொல்லன் வானமாகிய உலையில் கருமேகமாகிய கரியைக் குவித்து வாடைக் காற்றாகிய பெரிய துருத்தியால் ஊதி வளர்க்கும் அக்கினிச்சுவாலைகளாக குப்குப்பென்று வெளிப்படுகின்றன, அடுத்தடுத்து வெளிப்படுகின்ற இந்த மின்னல்-நாக்குகளிலே?

கொல்லனுடைய உலைக்களம் மறைந்து, கொல்லும் படைவீரர்கள் வாள் வீச்சு வீசும் போர்க்களமாகிறது வானம். அப்படி வீசுகின்றன இப்போது மின்னல்-வாள்கள். இடி யிடிக்கிறது, படை முரசுகள் முழங்குவது போல. அம்புமாரி பொழிவது போலப் பொழிகிறது மழை மாரி.

இந்த யுத்தத்திலே அரக்கர் படை அழிந்து வானவர்கள் ஆரவாரிப்பது போலவே இடி முழங்குகிறது, இப்போது. அவர்கள் பூமழை பொழிவது போலவும் பொழிகின்றது மழை மாரி.

ராமன் துயரம்

மழை பெய்த பயனாக, வாடியிருந்த மரங்கள் தளிர்க்கின்றன. பூமியெங்கும்

பசும்புல் முளைக்கிறது. பூமிதேவி மயிர்க் கூச்செறிந்தது போல. ராமனே,

காரைக் கண்டனன்,
வெந்துயர்க்(கு) ஒருகரை
காணுன்.

[காரைக் கண்டனன் - கார்காலத்தைக் கண்டு. வெந்துயர்க்கு - கொடிய துயரத்திற்கு.]

மயில்கள் தோகை விரித்தாடுகின்றன :

கானம் யாவையும்
பரப்பிய கண்ணெனச்
சனகன்
மானை நாடிநின்(று)
அழைப்பன போன்றன
மஞ்ஞை.

[சனகன் மானை - ஜனகன் பெண்ணுகிய சீதையை. மஞ்ஞை - மயில்.]

மயில்கள் தோகைக் கண்களைப் பரப்பிக் காடெங்கும் ஆடுகின்றனவாம். இது காடெல்லாம் கண்ணுய்ச் சீதையைத் தேடுவது போல் இருக்கிறதாம். ஆனால் கண்ட பலன்தானென்ன ?

காரே ! எனது –
விகலக் குதியோ ?

— 'கார்காலமே! எனது ஆவியைக் கலக்கி விடுவாயோ?' என்று கதறுகிருன் ராமன்.

மயிலே நோக்கி மருண்டு போகிருன். வானை நோக்கி இரங்குகிருன். பூங்கொடியை நோக்கிப் புலம்புகிருன்.

வாடைக் காற்று பேய்க் காற்றுக வீச வருந்திப் புலம்புகிருன் :

ஓடைவாள் நுதலி ணுளை
ஒளிக்கலாம் உபாயம் உன்னி
நாடிமா ரீச ணுர்ஓர்
ஆடக நவ்வி யானர் ;
வாடையாய்க் கூற்றி ணுரும்
உருவினை மாற்றி வந்நார் !
கேடுசூழ் வார்க்கு வேண்டும்
உருக்கொளக் கிடைத்த
அன்றே !

[ஓடை - ராஜபத்தினி அணியும் நெற்றிப் பட்டம். வாள் நுதலினுள் - ஒளி வீசும் நெற்றியுள்ள சீதை. ஒளிக்கலாம் உபாயம் உன்னி - ராவணன் கவர்ந்து ஒளித்தற்கு ஏற்ற உபாயத்தை ஆலோசித்து. ஆடக நவ்வி - பொன் மான். கூற்றினுரும் - யமனும். கேடு சூழ்வார்க்கு - கேடு செய்யக் கருதுவோருக்கு. உருக்கொளா - உருவங்கள் கொள்ள.]

சீதையை ராவணன் கவர்ந்து ஒளித்து வைப்பதற்கேற்ற உபாயத்தை ஆலோசித்து நாடி அறிந்து மாரீசன் பொன் மானுக வந்தானல்லவா? அத்தகைய 'புண்ணிய கைங்கரியம் செய்த பெரியாரை' மாரீசனர் என்று மரியாதைப் பன்மையில் கௌரவிக்க வேண்டியது தானே ! பண்பட்ட உள்ளம் எப்படிப் புண்பட்டுப் புலம்புகிறது பாருங்கள் !

மாரீசனரின் மகத்தான உதாரணத்தைப் பின்பற்றி, 'கூற்றினுரும்' வாடைக் காற்றினுராக உருமாறி— வேஷம் மாருடி — வருகிருராம். 'அயோக்கியர்கள் எப்படியெல்லாம் ஆள் மாருட்டம் செய்ய வல்லவர்கள் !' என்று கலங்குகிருன் ராமன்.

* * *

மேகம் மறுபடியும் இடிக் குரலில் கர்ஜிக்கிறது. மின்னற் கொடிகள் சீதையின் வடிவத்தை எழுதிக் காட்டுவது போல் திசைக்குத் திசை வெட்டிப் பாய்கின்றன.

உருவினைக் காட்டிக் காட்டி
ஒளிக்கின்ருய், ஒளிக்கின்
ருயால் !

என்று அலறுகிறது ராமனுடைய இதயம்.

இனி லட்சுமணன் வந்து ராமனை எப்படித் தேற்றப் போகிருன் என்று பார்ப்போம்.



346. துயருற்றவனும், தூங்கியவனும்

கார் காலத்திலே சித்தப் பிரமை கொண்டது போல் வருந்திக் கொண்டிருந்த ராமனுக்கு லட்சுமணன் தேறுதல் சொல்லுகிறான்.

சீதை திரும்பி விட்டாள்

ஏது எப்படிப் போனாலும் ராமனுள்ளம் சிறிதும் நிலைகுலையாது என்பதைத் தம்பி நன்கு அறிவான். எனவே,

மறை துளங்கினும்,
மதி துளங்கினும்,
வானும் ஆழ்கடல்
வையமும்
நிறை துளங்கினும்,
நிலை துளங்குறு
நிலைமை நின்வயின்
நிற்குமோ?

[மறை துளங்கினும் - வேதங்கள் பேதித்து நிலை கலங்கி விட்டாலும். மதி துளங்கினும் - சந்திரன் நிலை தவறிப் போனாலும். ஆழ்கடல் வையமும் - ஆழ்ந்த கடல் சூழ்ந்த பூமியும். நிறை துளங்கினும் - நிற்கும் முறை தவறிப் போனாலும். நிலை துளங்குறு நிலைமை - நிலை கலங்கும் தன்மை. நின் வயின் நிற்குமோ - உன்னிடம் நிற்குமோ.]

என்று கேட்கிறான்.

'இத்தகைய மகாவீரனாகிய நீ தளர்ச்சியடைவதற்கு என்ன காரணம்தான் இருக்க முடியும்? அனுமன் அங்கதன் முதலிய வானர வீரர்கள் பெருந்தொகையினராக நமக்கு உதவி செய்யக் காத்திருக்கிறார்கள். இந்தக் கார் காலம் விரைவில் கழிந்து கொண்டிருக்கிறது. அண்ணா, சீதை திரும்பி விட்டாள்! துயரம் தவிர்ப்பாயாக' என்று தேற்றுகிறான்.

'தண்டகாரணிய வாசிகளான முனிவர்களுடைய துன்பங்களைப் போக்குவதாக உறுதிமொழி கூறியிருக்கிறாயே. விதி வசமாக அந்த அரக்கர்கள் உனக்கும் குற்றம் செய்து விட்டார்கள். இதை வியாஜமாகக் கொண்டு லோக கண்டகர்களை அழித்துப் புகழ் சூட வேண்டும். அண்ணா! உனக்கு ஆகாததுமுண்டோ?' என்று இவ்விதமாகத் தேற்றியதும், அண்ணன் சிறிது ஆறுதல் அடைகிறான்.



பின் மழையும், பின்பும்

பின் மழை தொடங்கிப் பெருமழையாகிறது. நோய் மேல் நோய் வருவது போல, குளம் முதலிய நீர்நிலைகள் நிறைகின்றன. மலைகள் குளிர்ந்து விடுகின்றன. திசை தெரியாமல் காள மேகங்கள் அடர்ந்து கவிகின்றன. சில சமயங்களில் 'பகல் வந்தது! இரவு வந்தது!' என்று அறிவதும் கஷ்டமாயிருக்கிறது.

மலைச் சுனைகளிலும் மலையருவிகளிலும் நீராடுவோர் எவரும் இல்லை. ஊஞ்சல்களில் உல்லாசமாயிருந்து ஆடுவோர் இல்லை. பரண்களும் ஆள் இல்லாமல் வெறுமையாயிருக்கின்றன. இப்படிப்பட்ட அந்தப் பெரு மழைக் காலத்திலே சீதா விரகத்தால் ராமன் எவ்வளவு வருந்தியிருக்க வேண்டும்!

மானைப் போல மருண்டு நோக்கும் சீதையின் கண்ணழகும் புன்சிரிப்பும் ராமன் மனக் கண்முன் அடிக்கடி தோன்றுகின்றன. அந்த மழை இருட்டிலே ராமன் நெருப்புப் போலப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான்.

பக்கத்திலுள்ள தம்பியை நோக்கி, 'ராவணனால் வஞ்சிக்கப்பட்டிருக்கும் சீதை இப்போது எவ்வளவு துன்பத்தை அனுபவித்துக்



கொண்டிருக்கிறானோ? தப்பிவிட ஒரு வழியும் காணாமல் இறந்து கொண்டிருக்கிறான் என்றே நினைக்கிறேன். எனக்கும் எப்படி உயிரை வைத்துக் கொண்டிருப்பது என்று தெரியவில்லை. இது என்ன காலமோ? அம்புகள் அம்பறாத் தூணியில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. நான் வனத்திற்கு வந்து சாதித்த காரியத்தைக் குறித்து உலகம் சிரிக்குமல்லவா? அரக்கர்களின் இருப்பிடத்தை நாம் இன்னும் எத்தனை நாள் கழித்துக் காணப் போகிறோமோ? என் துன்பத்திற்கு முடிவு மரணம் தான் என்று எண்ணுகிறேன்' என்கிறான்.

மேகங்கள் வெளுத்துப் பின் மழைக் காலத்திற்கும் ஒரு முடிவு ஏற்படுகிறது. மழையும் இருளும் இடியும் மின்னலும் மறைகின்றன. வெள்ளம் வற்றி அருவிகள் குறைந்து விழுகின்றன.

நீர் நிலைகளில் தண்ணீர் தெளிந்து அத் தெளிந்த நீரில் கயல் மீன்கள் அங்கு மிங்கும் புரளுகின்றன; துள்ளுகின்றன:

வஞ்சனைத் தீவினை
  மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தன
  நீரம்; நீர்தொறும்,
பஞ்செனச் சிவக்கும்மென்
  பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப்
  பிறழ்ந்த ஆடல்மீன்.

[மாதவர் - பெருந் தவமுள்ள முனிவர்கள். நீரம்-நீர் நிலைகளிலுள்ள தண்ணீர். நீர்தொறும் - அந்தத் தண்ணீரில் எல்லாம். பஞ்செனச் சிவக்கும் மென் பாதப் பேதையர் - பஞ்சின்மேல் நடக்க வேண்டுமென்று சொன்னாலும் கூசிச் சிவக்கும் மென்மையான பாதங்களையுடைய பெண்கள். அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்தன-மையிட்ட கண்கள் போலப் பிறழ்ந்தன. ஆடல் மீன் - விளையாடுவது போல் அங்குமிங்கும் தள்ளி விழுவதும், பிறழ்வதுமாக இருக்கும் மீன்கள்.]

கார்காலம் கழிய, மயில்கள், ஒடுங்குகின்றன. தவளைகள் குரல் அடங்குகின்றன. எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பாடம் படிக்கும் திண்ணைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் போலத் தவளைகள் எல்லாம் ஒருமித்துக் கத்திக் கொண்டிருந்தனவாம். இப்போதோ,

கல்வியின் திகழ்கணக்-
  காயர் கம்பலைப்
பல்விதச் சிறாரெனப்
  பகர்வ பல்அரி,
செல்இடத்(து) அல்ல(து)
          ஒன்(று)
  உரைத்தல் செய்கலா
நல்லறி வாளரின்
  அவிந்த நாவெலாம்.

[கல்வியின் திகழ் - கல்வியால் திகழும். கணக்காயர்-சிறு பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களின் கீழ். கம்பலைப் பல்விதச் சிறாரென - ஆரவாரத்தோடு படித்துக் கொண்டிருக்கிற பலவகைச் சிறுவர்கள் போல. பகர்வ - (இங்கே) கத்திக் கொண்டிருந்தனவான. பல் அரி - பல வகைப்பட்ட தவளைகளும். செல்இடத்து அல்லது - தங்கள் சொற்கள் செல்லும் இடத்தில் அல்லது மற்றை இடங்களில். ஒன்று உரைத்தல் செய்கலா - ஒரு வார்த்தையும் சொல்லாத. நல்லறிவாளரின் - நல்ல அறிவாளர்கள் போல். அவிந்த நாவெலாம் - வாய் அடங்கி விட்டன.]

தூங்கிய மன்னன்

தவணை கழிந்தும் சுக்கிரீவன் சொன்னபடி வந்து சேரவில்லை. கார்காலத்திலே ராமன் அனுபவித்த துன்பம் எல்லாம் இப்போது சுக்கிரீவன் மீது கோபமாக மாறுகிறது:

அன்ன காலம்
  அகலும் அளவினில்,
முன்னை வீரன்
  இளவலை, 'மொய்ம்பினோய்!
சொன்ன எல்லையின்
  ஊங்கும்,அத் தூங்கிய
மன்னன் வந்திலன்,
  என்செய்த வாறரோ!

[அன்ன காலம் - அத்தன்மையான காலம். அகலும் அளவினில் - கழியும் அளவில். முன்னை வீரன் - மூத்த வீரனுகிய ராமன். இளவலை - தம்பியை நோக்கி. மொய்ம்பினுேய் - வலிமையுள்ளவனே; லட்சுமண வீரா. சொன்ன எல்லையின் ஊங்கும் - சொன்ன நாலு மாதத் தவணை கழிந்த தன் மேலும். அத் தூங்கிய மன்னன் - (இங்கே) அந்த அஜாக்கிரதை மகா ராஜாவான சுக்கிரீவன். வந்திலன் - வந்தானில்லை. என் செய்தவாறு - அவன் செய்த காரியம் எப்படியிருக்கிறது.]

சுக்கிரீவனை ராமன் 'தூங்கிய மன்னன்' என்று குறிப்பிடுகிறுன். இதற்கு 'உறங்கிப்போன அரசன்' என்று அர்த்தத்தில் பொருள் கிடையாது. காரியத்தில் கருத்தில்லாமல் அஜாக்கிரதையாயிருக்கும் நிலைதான் 'தூங்கிய' நிலை. அந்தப் பொருளிலிருந்து 'தூங்கிய' என்பதற்கு 'உறங்கிய' என்ற பொருள் எப்படி வந்து சேர்ந்து விட்டதென்று ஆலோசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

'என் சொல்லை உபேட்சித்து விட்டான். தன் சொல்லையும் மறந்து வாக்குத் தவறி விட்டான். செய்நன்றி மறந்தான். எல்லாம் அதிகார வெறி, அரசாட்சி என்ற மதுபானம்!' என்று கருதும் ராமன், சுக்கிரீவனைத் 'தூங்கிய மன்னன்' என்று குறிப்பிடுகிறுன்.

கிஷ்கிந்தா பட்டணத்தின் அரசாட்சி யென்றுல், வாலி ஆண்ட செல்வமல்லவா? அதை அபினுகக் கொண்டு மயங்கிக் கிடக்கிறுனும்:

பெறல் அருந்திருப்
பெற்(று),உத விப்பெருந்
திறன் நினைந்திலன்;
சீர்மையின் தீர்ந்தனன்;
அறம் மறந்தனன்!
அன்பு கிடக்க,நம்
மறம் அறிந்திலன்;
வாழ்வினன் மயங்கினுன்!

[பெறல் அருந்திரு - பெறுதற்கு அரிய அரசாட்சிச் செல்வம். உதவிப் பெருந்திறன் - உதவியின் பெருமையை. நினைந்திலன் - நினைத்துப் பார்த்தானில்லை. சீர்மையின் - சிறந்த ஒழுக்கத்திலிருந்து. தீர்ந்தனன் - தீர்ந்து விட்டான். அறம் மறந்தனன் - அறத்தை மறந்துவிட்ட அவன். அன்பு கிடக்க - அன்பையும் தான் மறந்தது போகட்டும். நம் மறன் அறிந்திலன் - நமது பராக்கிரமத்தையாவது அறிந்து நினைவில் வைத்துக் கொண்டானில்லையே.]

காலத்தால் செய்த நன்றியை மறப்பதும் நன்ருகுமா? நன்றி கொன்றவனைக் கொன்றெழிப்பதும் பழியாகாது, பாவமாகாது என்கிறுன் ராமன்:

நன்றி கொன்(று),அரு
நட்பினை நார்அறுத்(து),
ஒன்றும் மெய்ம்மை
சிதைத்(து)உரை பொய்த்
துளான்—
கொன்று நீக்குதல்
குற்றத்தின் நீங்குமால்.
சென்று மற்றவன்
சிந்தையைத் தேர்குவாய்.

[அரு நட்பினை நார் அறுத்து - அருமையாகக் கொண்ட நட்பு என்ற பாச பந்தத்தை, அன்புக் கயிற்றை, அறுத்துக் கொண்டு; சிநேகத்தைப் பற்றற விட்டு. ஒன்றும் மெய்ம்மை - (எல்லாருக்கும்) பொருந்தும் உண்மையை. உரை பொய்த்துளான் - வாக்குப் பொய்த்தவனை. கொன்று நீக்குதல் - கொன்றெழித்தல். குற்றத்தின் நீங்கும்-குற்றத்திலிருந்து நீங்கிய செயலேயாகும். தேர்குவாய் - தெரிந்து வருவாய்.]

'தம்பி! நாம் செய்த உபகாரத்தை, காட்டிய அன்பை, மறந்தது போகட்டும்! நமது பராக்கிரமத்தையும் மறந்து போனுனே; வாழ்விலே மயங்கிப் போனுன்' என்று இவ்விதமாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே, அந்தப் பெருந் துன்ப நிலையில் ராமனுக்குப் பெருங் கோபம் பொங்கி விடுகிறது.

ராம பாணம் போலக் கனல் கக்கிச் சிறிவிழும் அந்தக் கோப வார்த்தையை அடுத்த வாரம் கேட்கலாமே.



347. உறங்கிக் கண்ட சொர்க்கம்

'துஷ்ட நிக்கிரகம் செய்ய எடுத்த கோதண்ட வில் இருக்கிறது; கூற்றுவனும் இருக்கிறான்! அரக்கர்களையே அன்றி, துஷ்ட வானரங்களையும் தொலைக்கக் கூடிய எங்கள் அம்பும் இருக்கிறது' என்று எச்சரிக்கை செய்யுமாறு தம்பியிடம் ராமன் கொதித்துப் பேசுகிறான்.

நண்பனுக்கும் தம்பிக்கும் எச்சரிக்கை!


அந்தக் கொதிப்போடு பொங்கி வரும் வார்த்தையைப் பாருங்கள் :

'வெம்பு கண்டகர்
விண்புக வேர்அறுத்(து),
இம்பர் நல்லறம்
செய்ய எடுத்தவிற்
கொம்பும்
உண்(டு), அருங்
கூற்றமும்
உண்(டு), எங்கள்
அம்பும்
உண்(டு)!' என்று
சொல்லு,
நம் ஆணையே.

[வெம்பு-உலகத்தைத் தவிக்கச் செய்யும். கண்டகர்-கொடியவர். இம்பர் - இந்த உலகத்தில். வில் கொம்பு - வில்லாகிய தண்டம். அருங் கூற்றம் - தடுத்தற்கு அரிய எமன்.]

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் அல்லவா அவதார நோக்கம்? துஷ்ட நிக்கிரகத்தை 'வெம்பு கண்டகர் விண் புக வேர் அறுத்து' என்று குறிப்பிட்டு, சிஷ்ட பரிபாலனமாகிய தர்மஸம்ஸ்தாபனத்தை 'இம்பர் நல்லறம் செய்ய' என்கிறான். விஷ முள்ளைப் போல் ஹிம்ஸித்து ஜன சமுதாயத்தைத் தவிக்கச் செய்வோரே 'வெம்பு கண்டகர்.'

கோபம் இன்னும் அதிகமாய்ப் பொங்குகிறது, உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருக்கும் பெருந் துன்பத்துடன். 'வானரப் பெயரும் மாண்டு போம் என்று பேசுவாய்' என்கிறான் தம்பியை நோக்கி. எல்லாம் எச்சரிக்கை தான் சுக்கிரீவனுக்கு!



அண்ணனைத் தம்பி அறிவான். தம்பியையும் அண்ணன் நன்றாக அறிவான். இவ்வளவு பேசிய பிறகு, இவன் அவர்களைச் சும்மா விடுவானா? எனவே, தம்பி புறப்

படுவதற்கு முன் தம்பிக்கே ஓர் எச்சரிக்கை அவசியமென்று கருதுகிறான் தமையன்.

'நீ சுக்கிரீவன் முதலியவர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு. அவர்கள் கேட்காவிட்டாலும், நீ கோபித்து ஒன்றும் செய்துவிடாதே! அவர்கள் சொல்லும் உத்தரங்களை என்னிடம் வந்து தெரிவிக்கவேண்டும். இப்போது போய்வா' என்று விடை கொடுக்கிறான்.

நீர் மேல் கிழித்த கோடுதானே ராம கோபம்? மறுபடியும் பழைய சாந்த மூர்த்தியாகி விடுகிறான்.

தமையன் கட்டளையைச் சிரமேற் கொண்டு லட்சுமணன் ராம பாணம் போல் சண்டப் பிரசண்ட வேகத்தோடு சென்று கிஷ்கிந்த மலையை அடைகிறான்.

வானரங்கள் நடுங்கி ஓடி அங்கதனுக்குச் செய்தி சொல்லுகின்றன. அவன் லட்சுமணன் வந்த நோக்கத்தைக் குறிப்பால் உணர்ந்துகொண்டு சிறிய தந்தையின் அரண்மனைக்குப் போகிறான்.

போகத்திற்கு விருந்து!

அந்த அரண்மனை நளன் என்ற சிற்பி கட்டியது. அங்கே வசதியான ஓர் இடத்திலே பூக்களைப் பரப்பி அமைக்கப் பெற்றிருக்கிறது ஓர் அழகிய படுக்கை. உறங்கிக் கொண்டிருக்கிறான் சுக்கிரீவன்.

நளன் இயற்றிய
நாயகக் கோயிலுள்
நள மலர்த்தகைப்
பள்ளியில், —

[நாயகக் கோயிலுள் - தலைமை பெற்ற அந்த அரண்மனைக்குள்ளே. நள மலர்த் தகைப் பள்ளியில் - இதழ் நிறைந்த மலர்கள் பரப்பிய அழகிய படுக்கையிலே.]

விளை துயிற்கு
விருந்து விரும்புவான்!

[விளை துயிற்கு - விளைகின்ற தூக்கத்திற்கு. விருந்த-விருந்தினனுவது.]

இப்படி விருந்தாளியாகும் புதிய அரசன், போகத்திலே தன்னை முழுக்க இழந்து விடுகிறான் :

தெள்ளி யோர் உத -
வப்பெருஞ் செல்வமாம்
கள்ளி னால் அறி—
கம்களித் தான்,கதிர்ப்
புள்ளி மாநெடும்
பொன்வரை புக்கதோர்
வெள்ளி மால்வரை
என்னவி ளங்குவான்.

[தெள்ளியோர் - தெளிந்த அறிவுள்ள ராம லட்சுமணர். பெருஞ் செல்வம் - அந்தப் பெரிய அரசாட்சிச் செல்வம். கதிர்ப் புள்ளி - ஒளிகளின் தொகுதி. மா நெடும் பொன்வரை - மிகப் பெரிய பொன் மலையில். புக்கது - புகுந்து கிடப்பதான. ஓர் வெள்ளி மால்வரை என்ன - பெரியதொரு வெள்ளிமலை போல.]

இப்படி வர்ணித்து வரும் கவிஞன், சுக்கிரீவனுடைய மயக்கத்தையும் சுக போகத்தையும் படிப்படியாக நம் கண் முன் கொண்டு வந்து காட்டி விடுகிறான்.

சுக்கிரீவனின் இந்தக் குறையை வாலி அறிந்திருந்ததால், கள்ளுண்டு கருத்தழிந்து தம்பி கெட்ட காரியம் செய்தபோதிலும் தன் மேல் ஏவிய அம்பை அவன் மேல் ஏவாமல் இருக்க வேண்டுமென்று ராமனை வரம் வேண்டியிருந்தான். அந்த ஞாபகமே,

அம்பும் உண்டென்று
சொல்லு,நம் ஆணையே

என்று சிறிய ராமனை முடிவில் ஆற்றியிருக்கவும் கூடும்.

ஆனால், இங்கே இவ்வளவு போகத்திற்கிடையே எந்த ஞாபகத்திற்குத் தான் இடம் இருக்கிறது? என்,

சிந்து வாரம்,
  திருநறை, தேக்(கு),அகில்
சந்த மாமயில் -
  சாயலர் தாழ்குழல்
கந்த மாமலர்க்
  காடுகள் தாவிய
மந்த மாருதம்
  வந்துற வைகுவான்.

[சிந்துவாரம் - நறுமணமுள்ள ஒரு வகை மரம். திரு நறை - நல்ல மணமுள்ள 'சுகந்தம்' என்னும் கொடி. தேக்கு - தேக்குமரம். அகில் - அகில் மரம். சந்த மாமயில் சாயலர் - (மேலே சொன்ன மரங்களுள்ள காட்டிலே வளர்ந்த) சிறந்த மயில் போலும் சாயலையுடைய பெண்களின். தாழ் குழல் - தொங்குகின்ற கூந்தலிலுள்ள. கந்த மாமலர்க் காடுகள் - நறுமணமுள்ள சிறந்த மலர்க் காடுகள். வந்து உற - வந்து வீச. வைகுவான் - படுக்கையில் தங்குவான்.]

மயக்கமும் படாடோபமும்

மதங்கொண்ட யானைபோல மயங்கிக் கிடக்கிறானாம்:

தித்தியாநின்ற
  செங்கிடை வாய்ச்சியர்
முத்த வாள்நகை
  முள்எயி(று) ஊறுதேன்
பித்தும் மாலும்
  பிறவும் பெருக்கலால்,
மத்த வாரணம்
  என்ன மயங்குவான்.

[தித்தியாநின்ற - தித்திக்கின்ற. செங்கிடை வாய்ச்சியர்-சிவந்த அதரத்தையுடையவர். முத்த வாள் நகை-முத்துப்போல வெண்ணிறமான ஒளியோடு



கூடிய புன்சிரிப்பு. முள் எயிறு - கூரிய பற்கள். பித்தம் - பைத்தியமும். மாறும் - மயக்கமும். பெருக்கலால் - அதிகப் படுத்துவதால். மத்த வாரணம் என்ன - மதங்கொண்ட யானை போல.]

இவ்வளவு போகத்திற்கிடையே சுக்ரீவன் கிடக்கும் அந்த அழகு தான் என்ன? ஆம், மலர்ந்து பொலிந்து தயங்கும் அந்த அழகு:

மகுட குண்டல
 மேமுதல் மண்டலத்(து)
உகுநெ டுஞ்சுடர்க்
 கற்றைஉ லாவலால்,
பகல வன்சுடர்
 பாய்பனி மால்வரை
தகம லர்ந்து
 பொலிந்து தயங்குவான்.

[மகுட குண்டலமே முதல் மண்டலத்து - மகுடமும் குண்டலங்களும் முதலிய சுடர் வட்டங்களிலிருந்து. உகும் நெடுஞ்சுடர்க் கற்றை - வீசுகின்ற மிகுதியான ஒளிகளின் தொகுதி. உலாவலால் - (சுக்ரீவனுடைய வெண்ணிற உடம்பெங்கும்) உலாவுதலால். பகலவன் சுடர் - சூரியனுடைய கிரணம். பாய் பனி மால் வரை - பாய்ந்து பரவும் பெரிய பனிமலை. தக - ஒப்ப.]

போகத்திலே மூழ்கிப் போய்விட்டான்!

இரத்தின கசிதமான கிரீடமும் ஆபரணங்களும் மின்ன, அந்தப் பொன் மயமான கட்டிலில் ஒரு வெள்ளிப் பனி மலைபோலக் கிடக்கிறான் சுக்ரீவன்.

அந்தப்புரத்தைச் சூழ்ந்து ஓர் இயற்கைப் பூங்காவனம்போலக் காட்சி தருகிறது இந்தக் கிஷ்கிந்த மலைப் பகுதி.

அங்கங்கேயுள்ள வாசனை மரங்கள் சுகந்தக் கொடிகள் முதலியவற்றின் நறுமணம் தாங்கி வரும் இளங்காற்று எவ்வளவு இனிமையாக வீசுகிறது!

அந்த வாசனைக் காடுகளிலே பூர்ண அழகும் வளர்ச்சியும் பெற்ற மயில்கள் போல் சாயலையுடைய பெண்கள் அந்தப்புரத்தில் காணப்படுகிறார்கள். இப் பெண்களின் கூந்தல்களிலே சூடியிருக்கும் மலர்க் காடுகளையும் தாவி ஸ்பரிசித்து வரும்போது, பூங்காற்றின் இனிமைதான் எவ்வளவு அதிகப்படுகிறது!

இத்தகைய மந்தமாருதத்தால் மொத்துண்டு போகத்திற்கு விருந்தாகிவிட்ட சிறிய தந்தையை, அங்கதன் மரியாதையாகத் துயில் எழுப்புகிறான்.

லட்சுமணன் பெருங் கோபத்தோடு ஆததிரமாக வந்திருப்பதாய்த் தெரிவித்தும் அந்த வார்த்தையைச் சுக்ரீவன் சிறிதும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை, உணர்ந்து கொள்ளவில்லை. போக வெறியும் கள் வெறியும் செல்வ வெறியும் அவ்வளவு தூரம் மெய்ம் மறந்திருக்கும்படி செய்து விடுகின்றன:

தனைஉ ணர்ந்திலன்,
 மெல்லணை துஞ்சினன்.

[மெல்லணை - மெத்தென்ற படுக்கையில்.]



348. தாரையின் வெற்றி

சிறிய தந்தையாரைத் துயிலெழுப்புவது சிரமமான காரியமாகத்தான் இருந்தது அங்கதனுக்கு. 'நான் சொல்வதைக் கேளும், அப்பா: ராமனுடைய தம்பியல்லவா வந்து விட்டான்? எவ்வளவு வேகமாய் வந்து சேர்ந்தான் தெரியுமா? உள்ளுக்குள்ளே பொங்குகிற கோபத்தை அந்த முகம் கண்ணாடி போலக் காட்டுகிறதே! உம்முடைய உள்ளக் கருத்து யாதோ?' என்று கேட்டுப் பார்த்தான்.

கள்வெறியும் பயவெறியும்

கேள்வி காதிலே விழுந்தால் தானே! உள்ளத்தில் கருத்து ஏதாவது இருந்தால்தானே? 'கள் உள்ளே, கருத்து வெளியே!' என்ற நிலையில் தானே கிடக்கிறான்? 'இன்னான் பேசுகிறான்; இன்ன வார்த்தையைச் சொல்லுகிறான்' என்பதே புரியவில்லை:



'இனைய
மாற்றம்
இசைத்தனன்'
என்பதேசர்
நினைவிலான்,
நெடுந் —
செல்வம்
நெருக்கலும்,
நனை நறுந்துளி
நஞ்சு மயக்கவும்,
தனை உணர்ந்திலன்.
மெல்லணை தங்கினான்.

[இனைய மாற்றம் - இந்த வார்த்தையை. இசைத்தனன் - சொன்னான். நெடுஞ் செல்வம் - அரசாட்சிப் பெருஞ் செல்வம். நனை நறுந்துளி நஞ்சு - தனக்குரிய மணமுள்ள தாரையாகிய கள். மெல்லணை தங்கினான் - மெத்தென்ற படுக்கையில் கிடந்தான்.]

பிறகு அங்கதன் அனுமனை அழைத்துக் கொண்டு தன் தாயாகிய தாரையிடம் சென்றான். பல வானரங்கள் லட்சுமண கோபத்திற்குப் பயந்து கிஷ்கிந்தாபுரியின் வாசற் கதவைச் சாத்தித் தாளிட்டுப் பெருங் கற்களையும் அடுக்கி வைத்தன. வேறு வானரங்கள் மரங்களுடனும் பாறைக் கற்களுடனும் போருக்குச் சித்தமாகி மதிற் பக்கத்திலே கூட்டமாய்க் கூடியிருந்தன.

'நம்மைத் தடுக்கும் உபாயமோ இது?' என்று லட்சுமணன் நகைத்து அலட்சியமாக உதைத்துத் தள்ள, கதவு முதலியன சுக்கல் சுக்க

லாய்ப் பறந்தோடின. குரங்குகள் நடுங்கிச் சிதறியோடின. கிஷ்கிந்த நகரமெங்கும் குழப்பம் உண்டாயிற்று.

அனுமன் ஆலோசனைப்படி

லட்சுமணன் நகரத்திற்குள்ளே புகுந்தான். அச்சமயம் தாரை, 'உதவி கொன்ற உங்களுக்கு ஆபத்து நெருங்கி விட்டது. எதிர்த்தீர்களானால் தொலைந்தீர்கள்!' என்று தன் இனத்தாரைக் கண்டித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கதன், 'அம்மா! வந்து விட்டாரே, என் செய்வோம்?' என்று கேட்டான். உடனே அனுமன், 'தாயே, நீரே சென்று வாசலில் போய் வழி மறிக்கவேணும்' என்று வேண்டிக்கொண்டான். 'இதுவே இப்போது செய்யத் தக்க தந்திரம்' என்பது அனுமன் கருத்து.

தாரை இசைந்து, அருகே யிருந்த வானர வீரர்களை நோக்கி, 'நீங்கள் எல்லாரும் அப்பால் போயிருங்கள்' என்று கட்டளை யிட்டுத் தன் தோழியருடன் அந்தப்புரத்தை விட்டு அரண்மனை வாசலுக்கு வந்து சேர்ந்தாள்.

அப்போதுதான் லட்சுமணனும் ராஜ வீதியைக் கடந்து அரண்மனை வாசலுக்கு வந்து சேர்ந்தான். அவன் அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கும் போது தாரை தைரியமாகத் தன் தோழியருடன் வந்து வழி மறித்து நின்றாள்.

லட்சுமணனுக்கும் பயம்!

இப்போது லட்சுமணனுக்கு ஏன் இந்தப் பயம்?

பேர்க்கருஞ் சீற்றம் பேர
முகம்பெயர்ந்(து) ஒதுங்கிற்
றல்லால்,
பார்க்கவும் அஞ்சி னான்,அப்
பணையினும் உயர்ந்த
தோளான்.

[பேர்க்கருஞ் சீற்றம் - மாற்ற முடியாத கோபமும். பேர - மாறிவிட ஒதுங்கிற்ற அல்லால் - ஒதுங்கி நின்றதல்லாமல். அப்பணையினும் உயர்ந்த தோளான் - பருமையைச் சிறுமையாக்கும் தோளையுடைய லட்சுமணன்; வரம்பு கடந்து பருத்த தோளையுடையவன்.]

பருமையின் எல்லை எவ்வளவுண்டோ அவ்வளவு பருத்திருந்ததாம் என்றெனவே லட்சுமணனுடைய தோள். இப்போது சுக்கிரீவன்மீது பொங்கிய கோப வெறியாலும் போர் வெறியாலும் அந்த வரம்பையும் கடந்து பருத்து விட்டதாம். அத்தகைய வீரனும், தாரையையும் தோழியரையும் கண்டதும் கூச்சமடைந்து அஞ்சி நிற்கிறானாம்.

தாரைக்கும் பயம்தான்!

பழைய வீரமும் கோபமும் இப்போது எங்கே? என்ன பயம், என்ன சங்கோசம்! தாரைக்கும் சங்கோசம் தான், நடுக்கம்தான்.

தாமரை வதனம் சாய்த்துத்
தனுநெடுந் தரையின் ஊன்றி,
மாமியர் குழுவின் வந்தா-
னும்என மைந்தன் நிற்க,
பூமியில் அணங்க னார்தம்
பொதுவிடைப் புகுந்து பொற்
[றோள் —
தூமன நெடுங்கண் - தாரை
நடுங்குவாள், இனைய சொன்
[னாள்.

[தாமரை வதனம் - தாமரை மலர் போன்ற தன் முகம். தனு - வில். குழு - கூட்டம். பூமியில் அணங்கனார் தம் பொதுவிடைப் புகுந்து - பூலோகத்தில் வந்து இறங்கிய தேவமாதர் போன்ற வானர மாதர்களின் கூட்டத்தினிடையே ஒதுங்கி. பொற்றோள் தூமன நெடுங்கண் தாரை - அழகிய தோள்களையும் தூய மனத்தையும் நீண்ட கண்களையும் உடைய தாரை. இனைய - இச்சொற்களை.]

வானர மாதர்கள் வானுலகிலிருந்து நழுவிவந்த தேவமாதர்கள்போலக் காண்கிறார்களாம். இவர்களின் தலைவியான தாரை லட்சுமணனுக்கு எதிரே வந்து நின்றும், அங்கே நின்று கொண்டிருக்

கக் கூசி மாதர் கூட்டத்தினிடையே புகுந்து கொள்கிறாள். இந்த நிலையிலும் லட்சுமணனோடு தைரியமாகப் பேச முயல்கிறாள். எனினும் அவனை நோக்கிப் பேசக் கூசி நடுங்குகிறாளாம்.

லட்சுமணனோ மாமிமார் கூட்டத்தினிடையே வந்த புது மாப்பிள்ளை போலக் கூசி நிற்கிறானாம். இந்த நிலையில் லட்சுமணனும் பேசத் துணிவின்றி ஒதுங்கி நிற்கிறான்.

தாரையின் சாதுரியம்

இப்படிப்பட்ட தர்ம சங்கடமான நிலையில் கதையைத்தான் எப்படி மேலே நடத்துவது? 'தங்கள் வருகையினால் நாங்கள் தீவினை தீர்ந்து பிழைத்துப் போனோம். வந்த காரியம் யாதோ? என்ற ஒரு கேள்வி இனிய, நடுங்கும் குரலில் திடீரென்று கேட்கிறது.

மைந்த! நின் பாதம் கொண்(டு)எம்
மனைவரப் பெற்று வாழ்ந்தேம்;
உய்ந்தனம் வினையும் தீர்ந்தேம்!
உறுதிவே(று) இதனின்
உண்டோ?

[மைந்த - (இங்கே) வீரனே. நின் பாதம் கொண்டு எம்மனை வர - எங்கள் மனைக்கு நீ நடந்து வர. வாழ்ந்தேம் - வாழ்ந்தோம். உய்ந்தனம் - உஜ்ஜீவிப்போம்; பிழைத்துப் போனோம். வினையும் தீர்ந்தேம் - தீவினைகள் அனைத்தும் தீரப்பெற்றோம்.]

என்ற கேள்விக்குப் பின் மேலும் பேசினாள்.

'வந்த காரியம் யாதோ?' என்ற கேள்விதான் எவ்வளவு நயமாக இனிமையாக வருகிறது! எத்தகைய பண்பட்ட, பொன்னான, உள்ளத்திலிருந்து புறப்படுகிறது:



'வெய்தின்நீ வருதல் நோக்கி
வெருவும் நும்சேனே, விர,
செய்திநான் உணர்கி லாது!
திருவுளம் தெரித்தி' என்றாள்;
'ஐய, நீ ஆழி வேந்தன்
அடியினை பிரிக லாதாய்,
எய்திய(து) என்னை ?' என்றாள்
இசையினும் இனியசொல்லாள்.

[வெய்தின் நீ வருதல் நோக்கி - நீ உக்கிரமாக வருவதைப் பார்த்து. வெருவும் நும் சேனை - உங்களுடைய வானர சேனை பயந்து போகுமே. செய்திநான் உணர்கிலாது - செய்தி இன்னதென்று தெரிந்து கொள்ளாமல். திருவுளம் தெரித்தி - திருவுள்ளத்தைத் தெரியச் சொல்லுவாய். ஆழிவேந்தன் - ஆக்ஞா சக்ரம் செலுத்தும் அரசன்; (இங்கே) ராமன். அடியினை பிரிகலாதாய் - திருவடிகளை எப்போதும் பிரியாமல் பணி செய்து கொண்டிருக்கும் நீ. எய்தியது என்னை - இங்கே வந்த காரியம் என்னவோ.]

'நீங்கள் வேகமாகவும் உக்கிரமாகவும் வருவது கண்டு உங்கள் சேனை அஞ்சுமே' என்ற பேச்சில் தான் எவ்வளவு சாதுரியம் தொனிக்கிறது! சுக்கிரீவனுடைய வானர சேனையை 'உங்கள் சேனை' என்று உபசரித்தும், உரிமை கொண்டாடியும் பேசிவிட்டு, 'திருவுள்ளம் தெரிவிப்பீர்' என்கிறாள்.

இதை யொட்டி முன்னிலும் துணிவாக, 'ராம கைங்கரியம் செய்யும் பாக்யசாலியான நீர் அதை விட்டு விட்டு இப்படி வரத் துணிந்த காரியம் தான் யாதோ?' என்று கேட்கிறாள்.

லட்சுமண கோபத்தைச் சற்றுக் கண்டிப்பது போலவும் தோன்றுகிறதல்லவா வார்த்தை யளவில்? ஆனால் குரலிலோ இசையினும் இனிமை. இது கம்பன் காட்டும் தாரையின் பண்பாடு.

'இப்படிப்பட்ட இனிய குரலில் இந்தக் கேள்வியைக் கேட்பவர் யாரோ?' என்று லட்சுமணன் தன் முகத்தைச் சிறிது நிமிர்த்திப் பார்க்கிறானாம். ஆம்; இது வரையில் தைரியம் இல்லாமல் தலை குனிந்து தரையை நோக்கி நின்றவன் தானே?

தாய் முகம் கண்ட சேய்போலே!

அந்த மதுரமான பேச்சைக் கேட்டுக் கொண்டே, சற்று நிமிர்ந்து லட்சுமணன் பார்ப்பது தான் என்ன? பூர்ண சந்திரன் பகற்பொழுதிலே ஒளி மழுங்கித் தோன்றும் காட்சியைத் தான் பார்க்கிறான். ஆம், தாரையின் அழகிய முகம் பரமசோக நிலையில் தோன்றுகிறதல்லவா இப்போது?

இந்த முகம் லட்சுமணனுடைய உள்ளத்தில் பளிச்சென்று தாய்மாரான சுமித்திரை முதலியோரை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறதாம்:

'ஆர்கொலோ உரைசெய் தார்?'
என்(று)
அருள்வரச் சீற்றம் அஃகா,
பார்குலாம் முழுவெண் திங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தி னாளை
இறைமுகம் எடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கல் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்.

[ஆர்கொலோ உரைசெய்தார் என்று - இப்படி உரை செய்தவர் யாரோ என்று அறிய விரும்பினவனாய். அருள் வர - கருணை பிறக்க. சீற்றம் அஃகா - சீற்றம் குறைந்தவனாய். பார்குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும் - பூமிக்கு விளக்கம் தரும் வெண்மையான பூர்ண சந்திரன் பகலில் வந்த தோற்றம் போன்ற. ஏர்குலாம் - அழகு விளங்கின. இறைமுகம் எடுத்து நோக்கி - முகத்தைச் சிறிது நிமிர்த்திப் பார்த்து. தார்குலாம் அலங்கல் மார்பன் - மலர்கள் விளங்கும் மாலை தரிக்கும் மார்புடையவன்; (இங்கே) லட்சுமணன்.]

வானர ராஜ்யத்தின் பேரரசனாயிருந்த வாலியின் பத்தினி விதவைக் கோலத்தோடு வந்து நிற்கும் காட்சி தான், தாயரை நினைக்கச் செய்கிறது, உளம் நைந்து கண்ணீரும் துளிக்கச் செய்கிறது லட்சுமணனுக்கு. தாரையின் வெற்றியையும், லட்சுமணன் சாந்த மூர்த்தியாவதையும் அடுத்த வாரம் காண்போம்.



349. கண்ணீரின் முழுவெற்றி

வாலி பத்தினியின் விதவைக் கோலம் கண்டதும் லட்சுமணனுள்ளத்திலே, 'என் தந்தை இறந்து விட்டதால், என் தாய்மாரும் இப்படிப்பட்ட கோலத்தோடு தானே இருப்பார்கள்' என்ற நினைவு உண்டாகிறது.

வள்ளல் உள்ளம்

இந்த நினைவு தன்புறுத்தக் கண்களில் நீர் துளிக்கிறது. உடனே நெஞ்சில் தவர்ச்சி ஏற்பட ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்று கொண்டிருக்கிறான் :

மங்கல அணியை நீக்கி,
மணியணி துறந்து, வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக்,
குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம்
மார்பு பூகக்
கழுத்தொடு
மறையப் போர்த்த
நங்கையைக்
கண்ட வள்ளல்,
நயனங்கள் பனி
ப்ப நின்றான்.

[மங்கல அணி - திருமங்கலியம். மணியணி - இரத்தின மயமான ஆபரணங்கள். வாசக் கொக்கு அலர் கோதை - வாசனையும் தேனும் உள்ள பூமாலைகள். குங்குமம் சாந்தம் கொட்டா - குங்குமப்பூவின் குழம்பும் சந்தனமும் பூசிக் கொள்ளாத. பூகக் கழுத்தொடு - பாக்கு மரம் போன்ற கழுத்துடன். மறையப் போர்த்த - மறையும்படி ஆடையால் நன்றாகப் போர்த்துள்ள. நங்கை - (இங்கே) பெண்களில் சிறந்த தாரை. வள்ளல் - (இங்கே) லட்சுமணன். நயனங்கள் - கண்கள். பனிப்ப - நீர் துளிக்க.]

உத்தம ஸ்திரீயாகிய தாரையை நங்கையென்று குறிப்பிட்டு, தன் குடும்பம்போல் பிறர் குடும்பத்தையும் அபேதமாக நினைத்துப் பார்க்கும் உத்தமனாகிய லட்சுமணனை 'வள்ளல்' என்று குறிப்பிடுவது பொருத்தம் தானே?



சிறிய தாயையும் மன்னிக்காத வள்ளல் நான்!

மெய்ம் மறந்து நங்கையின் கேள்விக்கு விடையொன்றும் கூறாமல் இருந்து விட்ட வள்ளல், 'உத்தரம் சொல்லாமலிருப்பது உசிதம் இல்லையே' எனத் திடீரென்று நினைத்துக் கொண்டு பதில் சொல்லுகிறான் :

‘இனையராம் என்னை ஈன்ற
இருவரும்!’ என்ன வந்த
நினைவினன், அயர்ப்புச் சென்ற
நெஞ்சினன், நெடிது நின்றான்,
‘வினவினாட்(கு) எதிர்ஓர் மாற்றம்
விளம்பவும் வேண்டும்’ என்(று), அப்
புனைகுழ லாட்கு, வந்த
காரியம் புகல்வ தானான்.

[இனையராம் - இத்தன்மையராகவே இருப்பர். என்னை ஈன்ற இருவரும் - என்னைப் பெற்ற தாய்மார் இருவரும். நினைவினன் - நினைவினால். அயர்ப்புச் சென்ற - தளர்ச்சி மிகுந்த. நெஞ்சினன் - நெஞ்சினனாய். நெடிது நின்றான் - நெடும்பொழுது ஒன்றும் தோன்றாமல் நின்றுகொண்டிருந்த லட்சுமணன். வினவினாட்கு - தன்னை நோக்கிக் கேள்வி கேட்டவளுக்கு. எதிர் ஓர் மாற்றம்-விடையாக ஒரு வார்த்தை. புனை குழலாட்கு-அழகிய கூந்தலுள்ள தாரைக்கு. புகல்வதானான் - சொல்லலானான்.]

தன்னைப் பெற்ற சுமித்திரையைப் போலவே ராமனைப் பெற்ற தாயையும் பாவிக்கும் லட்சுமணனுடைய உள்ளம் பரதன் தாயை விலக்கிவிடுகிறது. அண்ணனை, இரக்கமில்லாமல் அரசரிமையைப் பறித்துக்கொண்டு, வனத்திற்குத் துரத்திவிட்ட கொடுமையை இந்த வள்ளலால் மறக்கமுடியுமா? கைகேயியின் மனமாற்றத்தைக் காட்டிலே கண்டும் மன்னிக்க முடியவில்லையே! லட்சுமணனின் ராம பக்தி இப்படி!



வாலி பத்தினியின் பண்பாடு

தாய்மாரின் நினைவும் ஸங்கோசமும் நெடும்போது தடுத்துவிட்ட விடையானது வெகு மரியாதையாக வெளிப்படுகிறது. தாரை மீண்டும் வெகு சாதுரியமாகக் கோபம் தணியும்படி பேசுகிறான்.

குற்றத்தைப் பொறுப்பதே பொறுமை யென்றும், குற்றம் செய்யாதவரிடம் அன்பு பாராட்டுவது பொறுமையா-

காது என்றும் பேசுகிறான். ராமலட்சுமணருக்காக உயிரைக் கொடுப்பதே சுக்கிரீவன் முதலியோருக்குச் சிநேக தருமம் என்கிறாள். 'உங்களுக்கு வில்லைக் காட்டிலும் வேறொரு துணையும் வேண்டுமோ?' என்கிறாள். எனினும், சீதையைத் தேடும் பணிவிடைக்குச் சுக்கிரீவன் முதலியோர் சித்தமாயிருக்கிறார்கள் என்று பேசி முடிக்கிறாள்.

தாரையின் தோற்றமும் குரலும் வார்த்தைகளும் லட்சுமணனுள்ளத்தில் கருணையோடு வெட்கத்தையும் தூண்டுகின்றன:

என்(று) அவள் உரைத்த மாற்றம்
  யாவையும் இனிது கேட்டு,
நன்றுணர் கேள்வி யாளன்
  அருள்வர, நாண்உட்
      கொண்டான்.

[மாற்றம் - சொற்கள். நன்று உணர் கேள்வியாளன் - நன்றாகக் கேட்டு உணர்ந்த கல்வி கேள்விகளையுடைய லட்சுமணன். நாண் உட்கொண்டான் - நாணத்தை உள்ளத்தில் கொண்டான்.]



அநுமனின் பண்பாடு

லட்சுமணனுடைய நிலையைக் குறிப்பால் உணர்ந்த அநுமன் மெள்ள மெள்ள அருகில் வந்து வணங்கி நிற்கிறான். உடனே லட்சுமணன்,

வந்(து) அடி வணங்கி நின்ற
  மாருதி வதனம் நோக்கி,
'அந்தமில் கேள்வி நீயும்
  அயர்த்தனை யாகும் அன்றே?'

[மாருதி - அநுமன். அந்தமில் கேள்வி நீயும் - அளவில்லாத கல்வி கேள்விகளையுடைய நீயும். அயர்த்தனை யாகும் அன்றே - மறந்து விட்டாயல்லவா?]

என்று கேட்கிறான்.

அநுமனது வார்த்தைகளும் தோற்றமும் லட்சுமணனின் நெஞ்சிலே அன்பைத் தோற்றுவிக்கின்றன. சமாதானம் சொல்லி அநுமன் லட்சுமணனைச் சுக்கிரீவனிடம் அழைத்துப் போகிறான்.

'சுக்கிரீவனுக்கும் உங்களுக்கும் நட்பு ஏற்பட ஏதுவாயிருந்தது என் செயல் தானே? என்னால் ஏற்பட்ட இஷ்டம் கெட்டதானால் என் அறிவும் கெட்டது தானே? நாங்கள் உங்கள் அன்புக்கு உரியராய் என்றும் தொண்டு செய்யத் தவற மாட்டோம்...ராமன் ஆணையைச் சுக்கிரீவன் லட்சியம் செய்யாதிருக்கவில்லை. படை திரட்டுவோரைப் பல பக்கங்களுக்கும் அனுப்பியிருக்கிறான்...அரண்மனைக்கு உள்ளே வந்து உன் தமையனை சுக்கிரீவனோடு நீங்கள் அவனுக்கு அளித்த செல்வச் சிறப்பைச் சுற்றிப் பார்க்க வேண்டாமா?' என்றெல்லாம் அநுமன் சமாதானம் சொன்னதும், லட்சுமண கோபம் தீர்ந்து போகிறது. தாரையின் வெற்றியை அநுமன் உறுதிப்படுத்திக் கொள்கிறான்.

தாரையும் அநுமனும் சொன்ன விநய வார்த்தைகளிலிருந்து, 'சுக்கிரீவன் ராமனுணையை அலட்சியம் செய்யவில்லை. நெடுங்காலம் மனையை விட்டு வறுமையுற்றுத் திரிந்து கொண்டிருந்தவன் திடீரெனக் கிடைத்த ராஜ

போகத்தில் மதிமயங்கிப் போனுன்' என்பதை லட்சுமணன் ஊகித்துக் கொண்டான்.

வாலி மகன்

அங்கதன் மற்ற அமைச்சருடன் வந்து லட்சுமணனை அடிபணிகின்ருன். அவனை நோக்கி லட்சுமணன், 'உன் தந்தைக்கு என் வரவைத் தெரிவிப்பாய்' என்கிருன். அங்கதன் போய்ச் சுக்கிரீவனைத் துயிலெழுப்புகிருன். இப்போது சுக்கிரீவன் ஓரளவு மனத் தெளிவுடன், 'முன்னமே என்னிடம் ஏன் தெரிவிக்கவில்லை?' என்று அங்கதனிடம் ஒரு கேள்வி போடுகிருன்.

'நான் தெரிவித்தேன்; சித்தப்பா. நீர்தான் தெரிந்து கொள்ளவில்லை, சிந்தை தெளிவின்றி இருந்ததால்!' என்று வாலி மகன் பதில் சொன்னதும், சுக்கிரீவன் பெரிதும் பச்சாத்தாப மடைகிருன்.

குற்றவாளியும் கோபத் தம்பியும்

பிறகு லட்சுமணனை எதிர் கொள்ளப் போகிருன் சுக்கிரீவன்:

வண்ணவில் கரத்தான் முன்னர்க்
கவிக்குலத்(து) அரசன் வந்
[தான்.

[வண்ணவில் கரத்தான் - அழகிய வில்லை ஏந்திய கையையுடைய லட்சுமணன். கவிக்குலத்து அரசன் - வானர ராஜாவான சுக்கிரீவன்.]

சுக்கிரீவனைப் பார்த்ததும் லட்சுமணனுக்கு மறுபடியும் கோபம் மூளுகிறது. எனினும் அடக்கிக் கொள்கிருன்:

தோற்றிய அரிக்குலத்(து)
அரசைத், தோன்றலும்
ஏற்(று)எதிர் நோக்கினன்;
எழுந்த(து) அவ்வழி
சீற்றம்அங்(கு); அதுதனைத்
தெளிந்த சிந்தையால்
ஆற்றினன், தருமத்தின்
அமைதி உன்னுவான்.

[தோற்றிய - எதிரில் வந்து தோன்றிய. அரிக்குலத்து அரசை - வானரக் கூட்டத்தின் அரசனை சுக்கிரீவனை. தோன்றலும் - சிறந்தவனை லட்சுமணனும். ஏற்று - வரவேற்று. எதிர் நோக்கினன் - எதிரே பார்த்தான். எழுந்தது அவ்வழி சீற்றம் - அப்போது கோபம் மூண்டது. தருமத்தின் அமைதி உன்னுவான் - தருமத்தின் நிலைமையைக் கருதிய லட்சுமணன்.]

கோபம் வருத்தப்படுகிறது!

பிறகு லட்சுமணன் சுக்கிரீவனுடன் அரண்மனைக்குள்ளே போகிருன். சுக்கிரீவன் ஒரு சிங்காதனம் காட்டி வீற்றிருக்கும்படி லட்சுமணனை வேண்டிக் கொள்கிருன். இப்போது லட்சுமண கோபம் எவ்வளவு வருத்தமாக மாறி விடுகிறது!

'கல்லணை மனத்தினை
உடைக்கை கேகியால்,
எல்லணை மணிமுடி
துறந்த எம்பிரான்
புல்லணை வைக,யான்
பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகலும்
வேண்டுமோ?' என்ருன்.

[கல் அணை மனத்தினை - கல்லைப் போன்ற மனத்தை. உடை - உடைய. எல் அணை - ஒளி பொருந்திய. புல் அணை வைக - புல்லுப் படுக்கையில் தங்கி யிருக்க. பொன் செய் பூத்தொடர் மெல் அணை - பொன்னுல் செய்த பூக்களால் அலங்கரித்த மென்மையான ஆசனத்தில். வைகலும் - தங்குதலும்.]

இவ்விதமாக லட்சுமணன் ராமனுடைய துயரத்தை நினைப்பூட்டியதும் சுக்கிரீவன் முதலியோர் வருந்திச் சோர்ந்து கண்ணீர் வடிக்கிருர்கள்.

இந்தக் கண்ணீரிலே முற்றும் கரைந்து போகின்றன கோப தாபங்களெல்லாம். குற்றங் குறைகளும் கரைந்து மறைகின்றன. அந்தப் பொன்னுல் செய்த பூவால் அலங்கரித்த லட்சுமணனுக் கென்று போட்டிருக்கும் சிங்காதனம்தான் இப்போது எவ்வளவு வெட்கத்தால் குன்றிப் போயிருக்க வேண்டும்!



350. சுக்கிரீவனா, பரதனா?

லட்சுமணன் அண்ணனுக்கு நேர்ந்த துயரத்தைச் சொல்லிச் சிங்காதனத்தில் உட்கார மறுத்துக் கல் பதித்த கடினமான தரையில் உட்கார்ந்ததும், சுக்கிரீவன் நின்று கொண்டே குழந்தை போல் விம்மி அழுததும், வானர மகளிருக்கும் மைந்தருக்கும் முதியருக்கும் ஒருங்கே தளர்ச்சியையும் துயரத்தையும் உண்டாக்கி விட்டன.

உண்ணவும் மறுத்தான்

பிறகு சுக்கிரீவன் லட்சுமணனை நோக்கி, 'ஐயா, போஜன சமயமாகி விட்டதே, நீராடி அமுது செய்ய வேணும்' என்று வேண்டிக் கொண்டான்.



அதற்கு லட்சுமணன், 'துன்பமும் பழியும் நிறைந்த எங்களுக்கு அமுதமும் கசக்குமே! பழியும் வருத்தமுமே வயிற்றை நிரப்பி விட்டன! சீதையைத் தேடிக் காட்டுவதுதான் எங்களுக்குத் தேவாமிர்தம் ஊட்டுவதாகும். நான் திரும்பிப் போய்க் கிழங்கு காய் கனி முதலியவற்றைத் தேடிக் கொணர்ந்து அண்ணனை உண்பிக்க வேணும்; மிஞ்சியதை நானும் உண்பேன். ஆகவே இங்கு நான் தாமதிப்பது தகாது' என்றான்.

வாகனத்தையும் மறுத்தான்

லட்சுமணன் இப்படிச் சிங்காதனத்தில் உட்காரவும் மறுத்து, உண்ணவும் மறுத்தபின், சுக்கிரீவன் அனுமனுக்கு வானர சேனையைத் திரட்டி வருமாறு கட்டளையிட்டுவிட்டுத் தன் பரிவாரங்களுடனே ராமனிடம் விரைந்து சென்றான். லட்சுமணன் வாகனம் ஏறாமல் நடக்க, சுக்கிரீவனும் பாதசாரியாய்த் தன் சிவிகை பின் வரச் சென்றான்.

நண்பர் சந்திப்பு

ராமன் இருந்த இடத்தை நெருங்கியதும் சுக்கிரீவன் தன் சேனையைப் பின்னே நிறுத்தி விட்டுப் போய் ராமனைக் கண்டு வணங்கினான்.

ராமன் நண்பனைக் கண்டதும் தான் கொண்டிருந்த

கோபத்தை மறந்து அவனைத் தழுவிக் கொள்கிறான் :

நீண்டபொற் றடக்கையால்
 நெடிது புல்லினன்,
மூண்டெழு வெகுளிபோய்
 ஒளிப்ப, முன்புபோல்
ஈண்டிய கருணைதந்(து),
 இருக்கை ஏவியே.

[நீண்ட பொன் தடக்கையால் - நீண்டு தொங்குகிற அழகிய பெரிய கைகளால், நெடிது புல்லினன் - அழுத்தத் தழுவிக் கொண்டவனாய். மூண்டு எழு வெகுளி போய் ஒளிப்ப - (தவனை தவறியதே யென்ற) மூண்டெழுந்த கோபம் ஆறிப் போக. ஈண்டிய கருணை தந்து - மிக்க கருணை பாராட்டி. இருக்கை ஏவி - இருக்கும்படி கட்டளையிட்டு.]

க்ஷேம விசாரணைக் குறிப்பு

வணங்கினவனை வாரியெடுத்து மார் புறத் தழுவிப் பக்கத்தில் இருக்கச் செய்து ராமன் க்ஷேம விசாரணை செய் கிறான் :

அயல்இனி(து), இருத்தி, ' நின்
 அரசும் ஆணையும்
இயல்பினில் இயைந்தவே ?
 இனிதின் வைகுமே ?
புயல்பொரு தடக்கைநீ
 புரக்கும் பல்லுயிர்
வெயில்இல வேகுடை ?'
 எனவி னம்பினன்.

[அயல் இனித இருத்தி - அருகில் இனிமையாக இருக்கச் செய்து. நின் அரசம் ஆணையும் - உன்னுடைய ஆட்சி யும் ஆக்ஞாசக்ரமும். இயல்பினின் இயைந்தவே - இயற்கையாக அமைந் தனவோ. இனிதின் வைகுமே - இனிமையாக நடக்கின்றனவோ. புயல் பொரு தடக்கை நீ - மேகம்போல் வழ ங்குகிற நீண்ட கைகளையுடைய நீ. புரக் கும் பல்உயிர் - பாதுகாக்கிற பல உயிர் களும். வெயில் இலவே குடை - உன் னுடைய கொற்றவெண் குடையினால் வெயில் இல்லாமல் (அதாவது தாபம் இல்லாமல்) இருக்கின்றனவோ. வினம் பினன் - சொன்னான்; (இங்கே) கேட் டான்.]

இந்த க்ஷேம விசாரணையில், முதல் இரண்டு கேள்விகள் சுக்கிரீவனுடைய நன்மையையும், மூன்றாவது கேள்வி குடிகளின் நன்மையையும் கருதுவது போல் அமைந்திருந்தாலும், 'இந்த இரண்டு நன்மைகளும் அபேதமானவை; குடிகளின் நன்மையே சுக்கிரீவனின் நன்மை' என்பது ராமன் குறிப்பு.

இரவிலே இரவி !

அதற்குச் சுக்கிரீவன் எவ்வளவு பொருத்தமாக விடை கூறுகிறான் :

'இருளுடை உலகினுக்(கு)
 இரவி அன்னநின்
அருளுடை யேற்(கு),அவை
 அரிய வோ ?'என்றான்.

[இருள்உடை — இருளை உடைய. இரவிஅன்ன — சூரியனைப் போன்ற. நின் அருளுடையேற்கு — உன் அருளை யுடைய எனக்கு.]

வாலியால் பெருந் துன்பமுற்றுத் தன் மனைவியையும் இழந்திருந்த சுக்கிரீ வனுக்கு உலகத்திலே பகலேது, இர வேது ? எல்லாம் ஒரே இரவு தானே? அந்த இரவுக்கு இரவியாக உதயம் செய் ததாம் ராமனுடைய அருள்.

தான் பிழை செய்த பின்பும் அந்த அருள் குறைவு படாது தன்னைக் காப் பாற்றுகிறதாம். 'இத்தகைய அருள் துணையிருக்க, ராஜ்யபாரமும் குடி களுக்கு நன்மை செய்வதும் அருமை யான செயல்களா ?' என்கிறான் சுக்கிரீவன்.

பச்சாத்தாபம்

இதைப் பீடிகையாகக் கொண்டு, 'இத்தகைய அருளாளர் விஷயத்தில் செய்ந்நன்றி மறந்தேனே !' என்று தன் பெரும் பிழைக்காகத் தன்னைப் பெரி தும் வெறுத்துப் பேசுகிறான் :

பின்னரும் விளம்புவான் :
 'பெருமை யோய்! நின(து)
இன்னருள் உதவிய
 செல்வம் எய்தினேன்,

மன்னவ! நின்பணி
மறந்து வைகி, என்
புன்மைக் குரக்கியல்
புதுக்கினேன்' என்றான்.

[பெருமையோய் - பெருங் குணமுள்ளவனே. நின் பணி மறந்து வைகி - உன் கட்டளையை மீறி நடந்து. என் புன்மை—எனது அற்பமான தன்மையுள்ள. குரக்கியல் - குரங்கு + இயல். புதுக்கினேன் - புதிதாக வெளிப்படுத்திக் காட்டினேன்.]

குரங்குக் குணமும், பன்றிக் குணமும்

'என் சிறுமைக் குணம் பிறப்புரிமையான குரங்குக் குணமாகத்தான் இருக்க வேணும்; உன்னோடு நட்புச் செய்த காலத்தில் உன் பெருமையால் மறைந்திருந்து பிறகு வெளிப்பட்டிருக்க வேணும்' என்று சுக்கிரீவன் பச்சாத்தாபப்படுகிறான்.

இந்தப் பச்சாத்தாப உணர்ச்சி மேலும் பொங்குகிறது. 'திசையனைத்தும் போய்த் தேடிச் சீதையைக் காணும் பணி செய்தேனில்லையே! நீ பிரிவுத் துயரால் வருந்தியிருக்க நான் சுகபோக வாழ்வில் அமிழ்ந்து கிடந்தேனே!' என்கிறான். அந்தச் சுகபோகம் இப்போது சேற்றில் கிடக்கும் பன்றியின் நிலையை நினைப்பூட்டுவது குறிப்பு.

அப்போது குரங்குக் குணத்தை நினைத்து வருந்தியவன், இப்போது பன்றிக் குணத்தை எண்ணிப் பரிதவிக்கிறான்:

பெருந்திசை அனைத்தையும்
பிசைந்து நேடினேன்
தரும்தகை அமைந்தும் அத்
தன்மை செய்கிலேன்,
திருந்திழை திறத்தினால்
தெளிந்த சிந்தைநீ
வருந்தினை இருப்ப,
யான்
வாழ்வின் வைகினேன்!



[பெருந்திசை அனைத்தையும் - பெரிய திக்குக்கள் எல்லாவற்றையும். பிசைந்து தேடினேன் - ஆராய்ந்து தேடி. தரும் தகை அமைந்தும் - சீதையைக் கொணர்ந்து தரும் தகைமை என்னிடம் அமைந்திருந்தும். அத் தன்மை செய்கிலேன் - அப்படிச் செய்யாதவனாய். திருந்து இழை - தொழில் திருந்திய நகைகளை அணிந்தவள்; (இங்கே) அத்தகைய நகைகளைக் கழற்றி வீசிய சீதை. திறத்தினால் - காரணமாக. தெளிந்த சிந்தை நீ வருந்தினை இருப்ப - தெளிந்த சிந்தையுடைய நீ வருத்தத்துடன் இருக்கவும், வாழ்வின் வைகினேன் - இன்ப வாழ்க்கையில் காலங் கடத்தினேன்.]

'பரதன் நீ!'

இப்படியெல்லாம் தன்னைத்தானே நொந்துகொண்ட சுக்கிரீவனை ராமனது பேரருள் உடனே மன்னித்திருக்குமல்லவா? மேலும், நொந்து பேசுகிறான்:

'இனையன யானுடை
இயல்பும், எண்ணிய
நினைவும்என் றால்,இனி
நின்று யான்செயும்
வினையும்,நல் ஆண்மையும்
விளம்ப வேண்டுமோ?
வனைகழல் வரிசிலை
வள்ளி யோய்!'என்றான்.

[இனையன - இத்தன்மையன. யானுடை - என்னுடைய முழு உடைமையாக இருக்கும். நின்று - நிலைத்து. வினையும் - தொழிலும். வனைகழல் வரிசிலை வள்ளியோய் - கட்டிய வீரக் கழலும் கட்டமைந்த வில்லும் உடைய, வண்மைக் குணமுள்ள, ராமனே.]

'நீ பெருந்துயரத்தில் இருக்கவும் போகத்திலே புரண்டு கொண்டிருந்த நான் இனிமேல் நிலைத்த புத்தியுடன் செய்யக்கூடிய தொழிலும் ஆண்மையும் உண்டோ? உண்டென்று சொல்லத்தான் முடியுமா?' என்று தன் பிழைக்காக வெட்கமுற்றுப் பச்சாத்தாபப்படும் சுக்கிரீவன் ராமனது அருட்கண்ணில் எப்படித் தோன்றுகிறான் தெரியுமா?

தான் உதவியொன்றும் செய்யாமலிருக்க, ராமன் கொடும்பகை கொன்று, மனைவியை மீட்டுக்கொடுத்துத் தன்னை அரசனாக்கி முடி சூட்டி வைத்ததால் சுக்கிரீவன்,

வள்ளியோய்!

என்று அழைக்கிறான். ராமனோ, 'சுக்கிரீவனா நீ?

பரதன் நீ!'

என்றே பாராட்டுகிறான்.

சுக்கிரீவனுடைய பச்சாத்தாப வார்த்தைக்கு இரங்கி உருகும் ராமனது இன்னருள், வானரத் தம்பியின் 'குரங்குக் குண'த்தையும் 'பன்றிக் குண'த்தையும் அறவே மறந்து, முன்பு அளித்த அரசு போதாதென்று 'பரதன் நீ!' என்றும் பட்டம் கட்டி வைக்கிறது:

'பரதன் நீ, இனையன
பகரற் பாலையோ?

[இனையன பகரற் பாலையோ – இத்தன்மையான வார்த்தைகளைச் சொல்லக் கடவையோ.]

என்ற ராமனுடைய அருள் - நிலையைப் பாருங்கள்.

* * *

சீடைசியாக ராமன், 'இதுவரையும் கார்காலம் நமது முயற்சிகளுக்குத் தடையாக இருந்தது. உன்னுடைய இரங்கல் வார்த்தைகளிலிருந்து, இனிமேல் செய்ய வேண்டிய காரியம் தீவிரமாக நடைபெறும் என்று தெளிவாய்த் தெரிய வருகிறது. சரி; அனுமன் எங்கே?' என்று கேட்கிறான்.

'சேனைகளோடு நாளை இங்கே வருவான். உடனே நாம் செய்ய வேண்டியதை ஆலோசித்து முடிவு செய்து கொள்ளலாம்' என்று சுக்கிரீவன் பதில் சொல்லுகிறான்.

பகற்பொழுது கழிந்து விட்டதால் ராமன் சுக்கிரீவனை நோக்கி, 'நீ ஊருக்குப் போய் நாளைத் தினம் சேனையுடன் திரும்பி வா' என்கிறான்.